தமிழீழ ஆவணக் காப்பகம்

# எரிமலை

கலை பண்பாட்டு அரசியல் சமூக ஏடு ● ஆடி 1992

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
-SEINE ; FRANCE



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்










தமிழ் ஈழத்திலிருந்து
வெளி வரும்,
உயிர்த் துடிப்பும்
உன்னதமும் மிக்க
கலை, இலக்கிய, அரசியல்,
சமூக, பொருளாதார
ஏடுகளையே நீங்கள்
இதில் காண்கிறீர்கள்.

இரத்தம் தோய்ந்த
இந்த ஒவ்வொரு
எழுத்துக்களும்,
எங்கள்
நாடி நரம்புகளை
சுத்திகரிக்க வல்லன.

மண்ணும், இரத்தமும்
தோய்ந்த இந்த
எழுத்துக்கள்
புயலுக்குள் நின்று
போருக்குள் வாழ்ந்து
வாழ்க்கையை,
சுதந்திரத்தைத் தேடுவன.
அந்த வெளிச்சம் தரும்,
சிறு கீற்றாவது பட்டு
எங்களை மூடும்
இருள் கிழியட்டும்.









www.tamileelamarchive.com

## உள்ளே மலர்பவை

தமிழீழ ஆவணக் காப்பகம்



**போராட்டக் கவிதை**

தமிழீழத்தில் போராட்டக் கவிதைகள் ஒரு புரட்சி கர அரசியல் மாற்றத்துடன், சமூக பொருளாதார கட்டுமானங்களில் பெருமாற்றங்களை உருவாக்கக் கூடிய வகையில் உத்வேகம் பெற்று வளர்ந்து வருகின்றன.

.......... 03



**இயற்கைச் செல்வம்**

பதநீர் உற்பத்தியினால் சமூக கட்டமைப்புக்கள் தளர்வடைந்தன. மக்களுக்கு பனம் சீனியின் முக்கியத்துவம் புலப்படத் தொடங்கிய இவ் வேளையில், பனம் தொழில் வல்லுனர்களின் முக்கியத்தையும் உணரத் தலைப் பட்டுள்ளனர்.

.......... 07



**செக்கோஸ்லவாக்கியா:**

**சமாதானமான விவாகரத்து**

இன்றைய உலகில் மனிதனுக்கு தேவையாக இருப்பது தேசிய அரசே!
மிலான் குச்சன் (ஸ்லோவேனியா நாட்டின் ஜனாதிபதி)

......... 23



**துயர்ப்படும் தென் தமிழீழம்.**

தமிழீழத் தேசத்தில் ஆயுதப் புரட்சி உத்வேகம் அடைந்து செல்லச் செல்ல தனது தோல்விகளை சகிக்க முடியாத சிங்களப் பேரினவாத அரசு வன்முறைகளை மக்கள் மீது குறிப்பாக தென் தமிழீழத்தில் கட்டவிழ்த்து விட்டது.

.......... 27


| | | | |
|---|---|---|---|
| ஆசிரியர் கருத்து | ...02 | சூழல் பாதுகாப்பு | ...26 |
| மக்களின் கதை | ...09 | எல்லைக் கிராமப் பாதுகாப்புப் படை | ...29 |
| வரலாற்றுக் கட்டுரை | | தமிழகம் (குறும்பார்வை) | ...30 |
| சங்கிலி முதல் பிரபாகரன் வரை | ...11 | படிப்பினைகளை பதிவு செய்வோம் | ...31 |
| மீட்பு - சிறுகதை | ...15 | கவிதைகள் | ...32 |
| புகைப்படங்களும், கவிதைகளும் | ...18 | வாசகர் கடிதம் | ...33 |
| உயிர்ப்பு | ...20 | அன்னை பூமியில் | ...34 |
| வன்னியில் மலையக மக்கள் | ...21 | உண்மை நிகழ்வு | ...35 |


www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


எரிமலை

கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

பதினோராம் ஆண்டு

ஆடி 1992

ஆக்கங்கள்,
அபிப்பிராயங்கள்,
மற்றும் தொடர்புகட்கு:



எரிமலை
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
c/o T. C. C - France.
341, Rue des Pyrenees,
75020 Paris.
Tel: 43 58 11 42


# சமாதானத் திரை கிழித்து வெளிப்படும் போர்முழக்கம்

ஸ்ரீலங்கா அரசாங்கம் இதுவரை இருவழிப்பாதை என்ற கொள்கையையே கடைப்பிடிப்பதாகச் சொல்லி வந்துள்ளது. அதாவது சமாதான முயற்சிகளையும், போர் நடவடிக்கைகளையும் ஒருசேர மேற்கொண்டு இலங்கையில் வாழும் சகல மக்களுக்கும் நீதியான தீர்வொன்றைக்காண்பது என்பதே அதனது வாதமாக இருந்துள்ளது. பிடிவாதம் நிறைந்த விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்தி, பேச்சுவார்தைக்கு அழைத்து சமாதானத்தீர்வு காணுவதே தனது நோக்கம் எனவும் கூறி வந்துள்ளது. ஸ்ரீலங்கா அரசாங்கம் ஒரே வழிப்பாதையில் அதாவது இராணுவப் பாதையில் தான் எப்போதும் சென்றுகொண்டிருக்கின்றது என்பதும், தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை இராணுவ பலம் கொண்டு அடக்குவதுதான் அது வைத்துள்ள இறுதித்தீர்வு (Final solution) என்பதும் தற்போது அப்பட்டமாக வெளிப்பட்டுள்ளது. இவ்வளவு காலமும் இவ் ஏமாற்றுக்கு உட்பட்டது சர்வதேச சமூகம் மட்டுமல்ல, எம்மக்களில் ஒரு சாராரும்தான். 40 வருடகாலப் பட்டறிவும், கொடூர அனுபவமும் வாய்க்கப் பெற்ற அறிவார்ந்த எமது மக்களில் ஒரு சிலர் ஏமாந்ததுதான் ஆச்சரியமானது. இராணுவத்தீர்வுக்கு சமாதானப் போர்வையைப் போர்த்தி, செப்படி வித்தை காட்டிய ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் ராஜதந்திரம் பாராட்டப்படக் கூடியதுதான். அதிலும், ஜனாதிபதியின் வாய்மொழிகளை வேதவாக்காக நிதமும் உச்சாடனம் செய்துகொண்டு "பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் மூலம் தீர்வு வரப்போகின்றது" என்று எம்மக்கள் மத்தியில் பொய்யைப் பரப்பிக்கொண்டிருந்த சில தமிழ் பத்திரிகைகள், குழுக்கள் ஆகியவையே அதிகம் "பாராட்டப்படவேண்டியவை". அரசியல் சட்டம் என்ற காகிதத்தில் தமிழ் மொழிக்கு உத்தியோக மொழி அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளதால், தமிழ் மக்களுக்குப் பிரச்சனை எதுவும் இல்லை என்பதே அரசாங்கத்தின் உள்மனக் கருத்தாக உள்ளது. ஆனால், வெளியே காட்டப்படும் அரசாங்கத்தின் பொய்முகம், மாயத்தோற்றம் விடுதலைப் புலிகளின் சாதுரியமான ராஜதந்திர நகர்வுகளினால் சிதைக்கப்பட்டு வருகின்றது.

தமிழர் தாயகத்தை அங்கீகரிக்க மறுப்பது என்பது ஒருபுறம் இருக்க, வடக்கு, கிழக்கு இணைப்புக்கு ஆளும் கட்சியும், அதன் அமைச்சர்களும் எதிராய்ச் செயற்படுகின்றனர் என்ற நிலைக்கு கீழிறங்கி, சமாதானச் சம்புத்தரான ஜனாதிபதியே, தான் வடகிழக்கு இணைப்புக்கு எதிரானவர் என்று பகிரங்கமாக கூறவேண்டிய அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டது.

தம்ம பகவானான ஜனாதிபதியின், ஈழம் தவிர்ந்த எல்லாம் என்பது ஒன்றுமே இல்லை என்ற வெற்றுச் சொல்லாகிவிட்டது. வடகிழக்கு இணைப்புக்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி பிரச்சாரம் செய்யும் என்ற கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்திடம் தஞ்சம் அடையவேண்டிய அவரின் நிலைமை மிகவும் பரிதாபகரமானதே. ஆனால் இதுவரை காலமும், அவர் அனைவருக்கும் காட்சி தந்த சாத்வீகத் தோற்றம் இருக்கிறதே அது ஒரு கில்லாடி வித்தைதான்.

அமைதியின் முகத்திரை கிழிய, உள்ளேயிருந்து வெளிப்படுவது, நிணமும், இரத்தமும், சதைத்துண்டங்களும், அழிவுகளும், இடிபாடுகளும், சகதியும், துர்நாற்றமும் நிறைந்த அடக்குமுறைப் போர்தான். ஆதிக்கப் போரின் கோர தாண்டவம்தான் வெளிப்படையாக எஞ்சி நிற்கின்றது. அதனையே முழுமூச்சாக முன்னெடுத்துச் செல்ல, சிங்கள இனவாதம் ஸ்ரீலங்கா ஜனாதிபதியின் தலைமையில் ருத்திர உருக்கொள்கிறது.

இந்நிலையில் கரைகளில் ஒதுங்கியும், வேடிக்கை பார்த்தும், குற்றம் குறை சொல்லியும், எதிர்த்தும் நிற்கின்ற ஒரு சில தமிழ் மக்கள், எமது ஆத்மார்த்த சகோதரர்கள் என்ன செய்யப்போகின்றார்கள்? அடக்குமுறைக்கு தங்களையும், தங்கள் சந்ததியையும் ஆட்படுத்தி அழியவிடப் போகிறார்களா? அல்லது ஆதிக்கப் போருக்கு எதிராகப் போராடும் பேராளிகளுடன் தம்மை இணைத்துக் கொள்ளப் போகிறார்களா? வாழ்வா, சாவா என்ற இச்சந்தர்ப்பத்தில் தீர்மானிக்கவேண்டியது அவர்களே!

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# போராட்ட காலங்களில் முதன்மைப்படுத்தப் படும் போராட்டக் கவிதைகள்



பொன். பூலோகசிங்கம்

**ஒவ்வொரு உண்மைக் கவிஞனது சிந்தனை வீச்சும் கூர்மையடைந்து செல்வது நியதி. இதனால் அவனது உள்ளத்து உணர்வுகள் எரிமலைக் குழம்பாகத் தோற்றம் பெறுமே தவிர பனிக்கட்டியாக வார்க்கப்படமாட்டாது.**

**வெளிச்சம் - தமிழீழம்**

ஆத்மார்த்த விடயங்களை வெளிக்கொணரும் ஊடகங்கள் கலை இலக்கியங்களாகும். சில வார்த்தைகளால் சொல்லக்கூடியவை. சில சொல்லமுடியாத உணர்வுகளாகவும் எண்ணங்களாகவும் அமைந்துவிடுகின்றன. உள்ளத்தின் உண்மையொளியில் புடம் போடாத எவரது வார்த்தையிலும் கவித்துவம் களைகட்ட நியாயமேயில்லை. ஒருவன் கட்புல வழியாகவோ, செவிப்புல வழியாகவோ உள்வாங்கிக் கொண்டதை வெவ்வேறு நோக்கில் வெளிப்படுத்திப் பரிமாறிக்கொள்ளலாம். எதிலும் கவித்துவம் குன்றாமையே ஆதார சுருதியாகும்.

தாஜ்மகாலைப் பார்த்த ஒரு கவிஞன் காலமண்ணில் ஓர் கண்ணீர்த்துளி (Tear drop on the sands of Time) என்றான். இன்னொரு கவிஞனோ அதைப் பார்த்துவிட்டு அது கல்லால் அமைந்த கவிதை (Petrified Poetry) என்றான். இன்னொரு கவிஞன் தாஜ்மகாலைப் பற்றிக் கேட்டுவிட்டு உறைந்து போய்க் கிடக்கும் உன்னதமான சங்கீதம் (Frozen music) என்றான். மூவரும் உள்வாங்கிக் கொண்டது ஒரு விடயத்தையே. ஆனால் வெவ்வேறு கண்ணோட்டத்தில் அதனை வெளிப்படுத்திப் பரிமாறிக் கொண்டனர். இவர்களில் எவரும் யானையைப் பார்த்த குருடர்களாக இல்லாமையே இங்கு உயிர்த்துடிப்புள்ள உன்னத கருத்துக்கள் வரிவடிவம் பெறக் காரணமாயிற்று. இங்கு மேலோங்கி நிற்பது கவித்துவமே.

போராட்டச் சூழல் பெருமளவில் பிரசவிக்கும் இலக்கியம் கவிதையேயாகும். இதற்கு எந்தநாடும் விதிவிலக்கல்ல. போராட்டம் முனைப்படைந்துகொண்டு செல்லும் போது ஒவ்வொரு உண்மைக்கவிஞனது சிந்தனை வீச்சும் கூர்மையடைந்து செல்வது நியதி. இதனால் அவனது உள்ளத்து உணர்வுகள் எரிமலைக்குழம்பாக தோற்றம் பெறுமே தவிர பனிக்கட்டியாக வார்க்கப்படமாட்டாது. ரோமாபுரி எரியும் போது ஒரோயொரு நீரோ மன்னன்தான் பிடில் வாசித்தான். ஏனெனில் கொடுங்கோலின் முன்னே சங்கீதம் எடுபடாது. "நாமார்க்கும் குடியல்லோம்" என்பது ஒரு மதவாதியின் மந்திரமல்ல. மாறாக அது ஒரு புரட்சிக் கீதம். அடக்குமுறைக்கு அடிபணிய மறுக்கும் அடிமனத்தின் ஆவேசக்குரல் என்பதே சரியானதாகும். வீரசுதந்திரம் வேண்டி சுதந்திரக் கனலை மூட்டிய சுப்பிரமணிய பாரதி தனக்கு தொழில் கவிதை என்று முழக்கமிட்டு இமைப்பொழுதும் சோராது நாட்டு விடுதலைக்காக உழைத்தான். அவனது கருத்தில் மலர்ந்தவை அழகிய பூக்களல்ல. அவை அக்கினிப் புஷ்பங்களேயாகும். கொடியோர் செயல் அறுக்க தன் பேனையை கொலைவாளாகத் தூக்கிய பாரதிதாசனும் விதிவிலக்கல்ல.

ஒரு விடுதலைப் போராட்டம் பல்வேறு பரிமாணங்களூடாக வளர்ச்சியடைந்துகொண்டு செல்லும் போது ஒடுக்குமுறையாளனின் அடக்குமுறைகளும் அதிகரித்துக்கொண்டே செல்லும். இரண்டுக்குமிடையில் எப்போதும் சமாந்தரமான வளர்ச்சியும் இருக்கும். இக்காலகட்டத்தில் அங்கு இடம் பெறும் ஒடுக்குமுறையானது மனிதநேயமற்ற நடவடிக்கைகளும், அவற்றை எதிர்த்து நிற்கும் போராளிகளது தன்னலமற்ற தியாகமும் வீரமரணமும் கவிஞர்களது உள்ளத்தில் சூடேற்றிய உணர்வுகளாகக் கொந்தளிக்கும் போது அவை மக்களின் ஆவேசக்குரலாகவும் ஆத்மநாதமாகவும் வெளிப்படுகின்றன.

உலகமெங்கும் பரந்து வாழும் நீக்ரோ மக்கள் தம்மீதான அடக்குமுறைக்கு எதிராக சர்வதேச ரீதியாக கிளர்ந்தெழுந்து அதனை ஒருமுகப்படுத்தி தமது போராட்டத்தை பலமுள்ள அமைப்பாகக் கட்டி

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எழுப்பும் நோக்குடன் "கறுப்பர் சக்தி" (Black Power) என்ற கோட்பாட்டை உருவாக்கினர். இக்கோட்பாட்டினால் கவரப்பட்ட பல நீக்கிரோக்கள் தம்மைக் கவிஞர்களாக இனம் காட்டினார்கள். கறுப்பர் சக்தியை உள்வாங்கிக்கொண்ட பிரபல நீக்ரோ கவிஞர் நிக்கியோவானி தமக்கு நேர்ந்த அவலங்களைப் பின்வருமாறு கவிதையாக எடுத்துக் கூறி இறுதியில் ஒரு பிரகடனத்தையும் செய்கின்றான்.

"நான் சூறையாடப்பட்டேன்
நையப்புடைக்கப்பட்டேன்
என்னுடைய ரெலிவிஷன்
இரண்டு மோதிரங்கள்
ஆபிரிக்க அச்சுப்பிரதி
இரண்டு துவக்குகள்
எல்லாவற்றையும் எடுத்தார்கள்
இந்த உயிரை எடுத்தாலும்
இந்தப் புரட்சி நிற்காது."



இவரைவிட தென்னாபிரிக்க போராட்டக் கவிஞர்கள் டொன் எல். லீ, லங்ஸ்டன் விரியூஸ் முதலான பலர் இனங்காணப்பட்டுள்ளனர்.

## சீன இலக்கியத்தில் போராட்ட கவிதைகள்

ஒரு தேச விடுதலைப் போராட்டத்தில் ஆயுதம் தாங்கிய போராளிகளுக்கும் - மக்களுக்குமிடையிலான தொடர்பு எண்ணெய்க்கும், எரியும் திரிக்கும் இடையிலான தொடர்பைப் போன்றது. மக்கள் ஆதரவு பெருமளவில் இருக்கும் போதுதான் ஒரு போராளி தனது நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த முடியும். ஆயுதப்போராட்டத்தில் போராளிகளுக்கும் - பொதுமக்களுக்குமிடையிலான தொடர்பு நீர் நிரம்பி வழியும் தண்ணீர்த் தொட்டிக்கும் மீன்களுக்குமிடையிலான தொடர்பைப் போல் இருக்க வேண்டும் என "தீவிரவாதமும் மக்கள் தொடர்பும்" என்ற நூலில் பிரபல ஆராய்ச்சியாளரான வோல்டர் லக்கூர் (Wallter Laqueur) குறிப்பிடுகிறார். அவர் அதனை ஆங்கிலத்தில் கூறும்போது -

"The Terrorist needs Democratic
Permissiveness as a Fish needs Water"

என்கிறார். இக்கருத்தை உள்ளடக்கமாகக் கொண்டு பிரபல சீனக்கவிஞர் வாங்-ஷி ஷிவாங் செஞ்சேனை வீரர்களுக்கும் - பொதுமக்களுக்குமிடையிலான தொடர்பைப் பின்வருமாறு கவித்துவம் குன்றாமலும் கவிதையின் நயம் சுவைபடவும் கூறுகின்றார்.

இந்த இரவின் மோனத்தில்
இந்த வீரர் பயண சிப்பங்களோடு
மேலும் விரைகின்றார்கள்.
வேகமான தாவல் - ஆனாலும்
மிருதுவாக!
இவர்களைப் பாதுகாக்கும்
விவசாயிகளின் தூக்கம் கலைவதை
இந்த வீரர் விரும்பவில்லை.
மறுநாட் காலை -
வைகறை மலர்ந்தது
விழித்தெழுந்த கிராமவாசிகள்
செஞ்சேனை
வீரர்கள் சென்றிருப்பதைக்
கண்டு கொண்டனர்.
எல்லாத் தண்ணீர் தொட்டிகளும்
நிரம்பி வழிந்தன.
எல்லா வாசல்களும் கூட்டப்பட்டிருந்தன.
வெள்ளையடிக்கப்பட்ட சுவரில் தெரிந்த
துண்டுக் காகிதம் சொன்னது -
"நன்றி போய் வருகிறோம்"

## வியட்னாமியக் கவிதைகள்

"ஒரு கவிஞன் போராட்டக் கவிதைகளைப் படைத்தால் மட்டும் போதாது. போராட்டத்திற்குத் தலைமை தாங்கவும் வேண்டும்" என வியட்னாமிய தலைவர் கோச்சிமின் எழுதினார். கவிஞர் பைரனின் வரலாறு இக்கருத்திற்கு முன்னோடியாக அமைந்தது. ஆங்கில நாட்டுக் கவிஞரான அவர் அங்கிருந்து பல ஆயிரக்கணக்கான மைல்கள் கடந்து கிறீசுக்கு வந்து கிரிமியப் போரில் தானே நேரடியாகப் பங்களிப்புச் செய்தார். உலகில் பல கவிஞர்கள் போராட்டக் கவிதைகள் எழுதியுள்ளார் கள். ஆனால் போராட்டத்திற்கு தலைமை தாங்கியவர்கள் மிகச் சிலரேயாகும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

வியட்னாமியத் தலைவர் கோச்சிமினின் கவிதைகள் வியட்கொங் வீரர்களுக்கு ஊக்கமாத்திரைகளாக விளங்கின. தமது தேசவிடுதலைக்காக ஆக்கபூர்வமான பணிகளைச் செய்ய ஆசைகொண்ட கோச்சிமின் ஒருமுறை சீனாவுக்குள் நுழைந்தார். அவரை உளவாளி என நினைத்த சீனப் பொலிசார் அவரைக் கைதுசெய்து சிறையில் அடைத்தனர். ஏறக்குறைய பதின்மூன்று மாதச் சிறைவாசத்தின் போது கோச்சிமின் எழுதிய சிறைக் குறிப்புகள் சிறந்த கவிதைகளாகப் போற்றப்படுகின்றன. பல மொழிகளிலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. "நாலாயிரம் ஆண்டு வியட்னாமிய வரலாற்றில் புடம்போட்டு உருவான தனிவகை உருக்கை நிகர்த்தவை அவரது கவிதைகள்" என்று விமர்சகர்கள் கூறியுள்ளார்கள்.

## தெலுங்கானா போராட்டம்

இந்தியாவின் சுதந்திரப் போராட்ட வரலாறு பல விசித்திரமான நிகழ்ச்சிகளை உள்வாங்கிக் கொண்டது. ஆங்கிலேய ஏகாதிபத்தியம் இந்தியாவின் அரசியல் மேலாதிக்கத்தையும் பொருளாதார சுரண்டலையும் மேற்கொண்ட அதேவேளையில் இந்தியாவின் பல்லின சமூக அமைப்பிலும் பல்வேறு வடிவங்களில் ஒடுக்குமுறைகளையும் கையாண்டது. பிரித்தானிய ஆட்சியாளருக்கெதிராக தேசிய இயக்கங்களை நடாத்தியவர்களும் முழு இந்திய மக்களது நலனையும் முதன்மைப்படுத்தாமல் தமது வர்க்கம் சார்ந்த நலன்களைப் பேணுவதிலேயே அக்கறையுடையவர்களாக இருந்தார்கள்.

"முதலாவது இந்தியச் சுதந்திரப் போர்" என அறிஞர் கார்ல் மாக்ஸ் அவர்களால் வர்ணிக்கப்பட்டதும் "சிப்பாய்க்கலகம்" என வரலாற்றாசிரியர்களால் வரையப்பட்டதுமான 1857ம் ஆண்டு கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய ஜான்சிராணி, தாந்தியா தோபே முதலானோர் இந்தியாவின் நிலப்பிரபுக்களதும் குறுநில மன்னர்களதும் நலன்களில் பிரித்தானிய ஆட்சியாளர்கள் கைவைக்கக்கூடாது என்ற கருத்தையே வலியுறுத்தினார்கள். இந்தியாவின் தேசிய இயக்கங்களுக்கு தலைமை தாங்கிய மகாத்மாகாந்தியும் தாம் காண விரும்பும் நவபாரதம் ஒரு இராம இராட்சியமாக இருக்க வேண்டும் என்றே குறிப்பிட்டார். அந்த இராம இராட்சியம் எப்படி அமைய வேண்டும் என்று அவரிடம் கேட்கப்பட்ட போது,

"நான் விரும்பும் சுதந்திர இந்தியாவில் மன்னர்களும் உண்டு; குடிகளும் உண்டு. அங்கு நிலப்பிரபுக்களும் இருப்பார்கள்; விவசாயிகளும் இருப்பார்கள் அதுதான் என்னுடைய இராம இராட்சியம்" என்று வர்ணித்தார்.

இந்திய மக்கள் மத்தியிலான வர்க்க முரண்பாடுகள் கூர்மையடைந்திருப்பதை அவதானித்த, பிரித்தாளும் சூழ்ச்சியில் கைதேர்ந்த பிரித்தானியர்கள் அடக்குமுறைச் சட்டங்களை அமுல்படுத்தி இந்திய விவசாயிகளின் நிலங்களைச் சூறையாடி இந்திய ஜமீன்தார்களிடமும் நிலப்பிரபுகளிடமும் ஒப்படைத்தார்கள். தமது சொந்த நிலத்தைப் பறிகொடுத்த இந்திய விவசாயிகள் ஆங்காங்கே ஆயுதம் தாங்கிய பல கிளர்ச்சிகளை நடாத்தினார்கள். ஆயுதப் போராட்டத்தையும் அதன் இலக்கான அடிப்படை சமூக மாற்றத்தையும் அறவே விரும்பாத அறிவு ஜீவிகளான வரலாற்று ஆசிரியர்கள் இந்திய விவசாயிகளது போராட்ட முன்னெடுப்புக்களை கால வெள்ளத்தில் ஆழ மூழ்கடித்து விட்டார்கள்.

இந்திய விவசாயிகளது ஆயுதம் தாங்கிய போராட்டமானது இரு முனைப்பட்டதாக இருந்தது. ஆக்கிரமித்து நின்ற வெள்ளையர்களுக்கும் தமது நிலங்களைச் சூறையாடிய ஜமீன்தார்களான கொள்ளையர்களுக்கும் எதிரான தாக்கமுள்ள பல கிளர்ச்சிகளில் அவர்கள் ஈடுபட்டார்கள். இந்த வகையில் 1755ல் வெடித்துக் கிளம்பிய "சந்தால்" கலவரம், 1860ல் வங்காளத்தில் இடம் பெற்ற "அவுரி" கிளர்ச்சி, இதே காலப்பகுதியில் மகாராஷ்டிரத்தில் எழுந்த மராட்டா விவசாயிகள் கலகம், 1921ல் கேரள முஸ்லிம் விவசாயிகள் நடாத்திய மாப்பிள்ளைக் கலகம், ஆந்திராவில் அல்லூரி சீதாராம ராஜு தலைமையில் நடந்த ஆயுதமேந்திய போராட்டம் என்பவற்றைக் குறிப்பிடலாம்.



தாக்குதலுக்குத் தயாராகும்

தெலங்கானாப் போராளிகள்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இத்தகைய ஆயுதம் தாங்கிய கிளர்ச்சிகளில் தலைசிறந்த போராட்டம் தெலுங்கானா போராட்டமாகும். தளபதி ருத்திரையா தலைமை தாங்கிய தெலுங்கானா போராட்டம் இந்தியாவின் அரசியல்-சமூக பொருளாதார தளங்களில் ஊறிக்கிடந்த பல பிரச்சனைகளை துல்லியமாக வெளிக் கொணர்ந்தது. இப்போராட்டத்தால் பெருமளவில் ஆகர்சிக்கப்பட்ட கவிஞர் செரபண்டராஜு சிறைவைக்கப்பட்டிருந்த போது பல போராட்டக் கவிதைகளை இயற்றினார்.

## இன்னொரு சூரியனை...

விலங்கினுள் முடங்கல்
உனது விடுதலை
தகர்த்திடு!
மீட்டெடு உனது நிலத்தை!
சேர்வினுள் நீள்தல்
இழிதென வாழ்நிலை -
விழித்திடு -
உதைத்திடு இனியுன் நிலையை!
தழுவலுள் உயர்தல்
சுதந்திர நினைவதை -
ஆர்த்தெழு -
உருட்டிடு இறுகிய பகைமையை!
போரினுள் விடிதல்
உயர்த்திடு கரங்களை -
ஓங்கிடு
வாங்கிடு இன்னொரு சூரியனை!

செ. பொ. சிவனேஷ்

ஆந்திரப் பிரதேசத்தின் இலக்கிய வானில் சுடர் விட்டுப் பிரகாசிக்கும் அக்கவிஞனின் ஒரு கவிதை அடக்குமுறைக்கு எதிரான ஒரு போர்ப்பிரகடனம் போல் அமைந்துள்ளது. அக்கவிதை பின்வருமாறு:

"என் புரட்சிப் பாடலின் பல்லவியை
என் பாதச் சுவடுகளிலே
பிடித்துவிட வேண்டுமாம்
அதற்காக
என் கால் தூசியையும்
ஆராய்ச்சி செய்ய எடுத்து அனுப்புகிறார்கள்.
என்னுடைய குரல் குற்ற முடையது
எனது சிந்தனை அராஜகமானது
ஏனெனில்
அவர்களுடைய பாடலுக்கு
நான் கைத்தாளம் போடவில்லை
அவர்களை எனது தோளில் சுமந்து
செல்லவில்லை
என்னைச் சதிகாரன் என்றழைப்பதற்கு
சட்டப் புத்தகம் அவர்களுக்கு
ஆதாரமாய் இருக்கிறது
எல்லா மதங்களும்
பொதுவான மூடத்தனத்தை
மறைத்து வைத்திருப்பது போல
அவர்கள் தங்கள் வர்க்க நலன்களை
எல்லாச் சட்டங்களின்
புனித ஒப்புதலின் கீழ்
புதைத்து விடுகிறார்கள்
ஆனால் அவர்களுடைய
மதத்திற்கோ சட்டத்திற்கோ இசைவாக
ஒரு ராகம் கூட
என்தொண்டைக் குழியிலிருந்து வராது"

## பாலஸ்தீன கவிதைகள்

1948ம் ஆண்டு மத்திய கிழக்கில் அமெரிக்காவின் துணையோடு இஸ்ரவேல் என்ற யூதநாடு தோற்றம் பெற்றதோடு பலஸ்தீனர்கள் தமது நாட்டை இழந்து போனார்கள். தமது தாயகத்தைப் பறிகொடுத்த அவர்கள் தமது தாயகத்தை மீட்டெடுக்க வேண்டும் என்ற உணர்வைமட்டும் பறிகொடுக்கவில்லை. இன்று உலகம் பூராவும் அகதிமுகாம்களில் சிதறி வாழும் அம்மக்களின் உரிமைக்குரலாக பல கவிஞர்கள் தோற்றம் பெற்றுள்ளார்கள். அவர்கள் தமது ஆதங்கத்தை கவிதையாக்கியுள்ளார்கள். அவை பலஸ்தீனர்களின் போராட்டக் கவிதை இலக்கியமாகப் போற்றப்படுகின்றன.

தொடரும்...

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# பனை தென்னை வள
# அபிவிருத்தி ஒன்றியம்

**காப்பரண் - தமிழீழம்**

தமிழீழத்தின் பிரதான இயற்கை வளங்களான பனை, தென்னை வள அபிவிருத்தி நோக்குடன் தமிழீழ விடுதலைப் புலிகள் பிரதித் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா, 1991 பங்குனித் திங்கள் 29ஆம் நாள் இந்த நிறுவனத்தைத் தோற்றுவித்துள்ளார்.

தெங்கு, பனம்பொருள் உற்பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங்கங்கள், இச்சங்கங்களின் சமாசம், பனை அபிவிருத்திச் சபை, கூட்டுறவுத் திணைக்களம் (பனம் பொருள்), ஏற்றுமதி உற்பத்திக் கிராமியக் கம்பனிகள், பனை, தென்னைவள ஆர்வலர்கள், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் இணைந்த நிறுவனமே 'பனை, தென்னைவள அபிவிருத்தி ஒன்றியம்' ஆகும்.

ஒன்றியம், மேற்படி நிறுவனங்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகள் மூலம் பனை, தென்னை வளங்களை அபிவிருத்தி செய்தலும் அதனோடு சார்ந்த தொழில் வல்லுநர்களின் வாழ்வு, தொழில், பொருளாதாரத்தை மேம்பாடு அடையச் செய்தலும், தமிழீழ தேசிய பொருளாதாரக் கட்டமைப்பை விருத்தி செய்தலும் பிரதான குறிக்கோளாகக் கொண்டு செயற்படுகின்றது.

ஒன்றியத்தின் முதலாவது செயற்திட்டமாக, பதநீர், கள் உற்பத்திப் பொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்யப்பட்டது. இதுவரை காலமும் குறைந்த வருமானத்தையே பெற்றுவந்த கிராமப்புற பனந்தொழில் வல்லுநர்களின் பொருளாதார மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு:

> ஒரு போத்தல் கள்ளின் கொள்வனவு விலையாக ரூபா 6.00 (ஆறு) நிர்ணயிக்கப்பட்டது.

நீண்டகாலமாகக் கள்ளை மட்டும் உற்பத்தி செய்து வந்த தொழில் வல்லுநர்களைப் பதநீர் உற்பத்தி செய்யத் தூண்டும் முகமாக:

> ஒரு போத்தல் பதநீரின் கொள்வனவு விலையாக ரூபா 7.00 (ஏழு) நிர்ணயிக்கப்பட்டது.

> பதநீரின் விலை உயர்வினால் பனை வெல்லத்தின் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது.

பொதுமக்களின் நன்மை கருதிப் பனம் வெல்லத்தின் விற்பனை விலையைக் கட்டுப்படுத்தி, அதனால் வரும் உற்பத்தி ,நட்டத்தை ஈடுசெய்ய மானியம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. இதன் செயற்பாடாகவே மதுப் பாவனையாளரிடமிருந்து ஒரு போத்தல் கள்ளுக்கு 50 சதம் (ஐம்பது) வரியாகப் பெற்று, அதன் மூலம் திரட்டும் பணத்திலிருந்து ஒரு கிலோ பனம் வெல்ல உற்பத்திக்கு ரூபா 50.00 (ஐம்பது) மானியமாக வழங்கப்படுகின்றது.

திட்டமிட்ட இன்றைய பொருளாதாரத் தடைகளினால் எமது பிரதேசத்தில் சீனிக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. இந்த நிலைமை தொடராதிருக்க எமது மக்களின் சீனித் தேவையில் ஒரு பகுதியையாவது பூர்த்தி செய்யும் நோக்கோடு ஒவ்வொரு பனந்தொழில் வல்லுநரும் ஆகக் குறைந்தது 40 வீதம் பதநீரை உற்பத்தி செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளனர். இதற்கான கருத்தரங்குகள், தொழில் வல்லுநர்கள் மத்தியில் மேற்கொள்ளப்பட்டன. பனம் சீனி ஆலைகளின் உருவாக்க முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு, இது சார்ந்த தொழில் நுட்ப ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

பதநீர் உற்பத்தியினால் சமூகக் கட்டமைப்புக்கள் தளர்வடைந்தன. மக்களுக்குப் பனம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சீனியின் முக்கியத்துவம் புலப்படத் தொடங்கிய இவ்வேளையில் பனந் தொழில் வல்லுநர்களின் முக்கியத் தையும் உணரத் தலைப்பட்டுள் ளனர். அதிக பதநீரை உற்பத்தி செய்த தொழில் வல்லுநர்களுக்கு ஒன்றியம் தங்கப்பதக்கம், வெள் ளிப்பதக்கம், வெண்கலப் பதக்கங் களை வழங்கிக் கௌரவித்து ஊக் குவித்துள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் இன்றைய சீனித் தேவையில் நாம், தன்னிறைவை அடைய 30,-000 தொழில் வல்லுநர்கள் பதநீர் உற்பத்தியில் ஈடுபட வேண்டும். 1972ல் 12,000 தொகையாக இருந்த பனந்தொழில் வல்லுநர் கள் தொகை 1991இல் 6,000 பேராக வீழ்ச்சியடைந்துள்ளது. சமுதாயத்தில் குறிப்பிட்ட ஒரு பகுதி மக்கள் மட்டுமே மேற்கொ ண்டுவரும் பனந்தொழில் அனை வராலும் தேசிய உற்பத்தியாக மேற்கொள்ளப்படவேண்டும் என் பதையும் புதிய தொழில்நுட்ப உத் திகள் புகுத்தப்பட வேண்டும் என் பதையும் ஒன்றியம் கவனத்தில் கொண்டுள்ளது. இந்த அடிப்ப டையில் பனந்தொழில் வல்லுனர் களுக்கான 'சுயதொழில் பயிற்சி நெறி' ஒன்றியத்தால் மேற்கொள் ளப்பட்டு வருகின்றது. வேலை வாய்ப்புக்கள் இல்லாதிருக்கும் எமது பிரதேசத்தின் பெருமளவு இளைஞர்களுக்குத் தொழில் வாய்ப்பையும் அதன் மூலம் அதிக அளவிலான வருமானத்தைப் பெறும் வழிகளையும் இப்பயிற்சி நன்கு புலப்படுத்துகின்றது.

பனைசார் உற்பத்திப் பொருட்களின் பயன்பாடு, அவற் றின் முக்கியத்துவம் பற்றி பொது மக்கள், அறிஞர்கள் சகலதரப்பி னரும் அறியும் வகையில் யாழ்ப்பா ணப் பல்கலைக்கழகத்தில் -யாழ்ப் பாண விஞ்ஞான மன்றமும் பனை தென்னை வள அபிவிருத்தி ஒன் றியமும் இணைந்து 'பனை வள ஆய்வரங்கும் கண்காட்சியும்' என்ற நிகழ்வு ஒன்றை 1991 ஆனி 29, 30ந் திகதிகளில் நடத்தின. இதில் பல்துறைசார்ந்த அறிஞர்கள், பனைவள ஆர்வலர்கள், பொதுமக் கள், நலன் விரும்பிகள் கலந்து, எம் பனைவளத்தின் உன்னத நிலையை உணர்ந்து ஒன்றியத்து டன் இணைந்து செயற்படத் தொடங்கியுள்ளனர். பல்தரப்பட்ட மக்களும் பனையின் பயன்பாடுக ளையும் அதுசார்ந்த உற்பத்திக ளையும் நேருக்குநேர் கண்டு இந் நிகழ்வின் மூலம் புரிந்துணர்ந் தமை குறிப்பிடத் தக்கதாகும்.

தெங்கு, பனம்பொருள் உற் பத்தி விற்பனவு கூட்டுறவுச் சங் கங்களில் மகளிர் குழுக்கள் உரு வாக்கம் பெற்றன. பனைசார்ந்த கைப்பணிப் பயிற்சிகள் மூலம் குழுக்களில் உள்ளவர்களுக்கு சுயதொழில் வருமானம் பெறும் வழிவகைகள் உணர்த்தப்பட்டுள் ளன. பனாட்டு உற்பத்தி, பனம்க ளியை மூலப் பொருளாகக் கொண்ட புதிய உணவுற்பத்திகள் பெருமளவுக்கு மேற்கொள்ளப்பட் டதோடு பனங்களியைப் பயன்ப டுத்தி 'கற்பகா பாண்' போன்ற புதிய உற்பத்திகளும் நடைபெறு கின்றன.

கிராமிய உற்பத்திக் குழுக் கள், பாடசாலை மாணவர்கள், பொது நிறுவனங்கள் ஊடாகப் பெருமளவு பனம் விதைகள் நாட் டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. தெ. ப. பொ. கூ. சங்கங்கள் ரீதி யாக, பனை, தென்னைவள உற் பத்திகளைச் செயற்படுத்தியதா னது பனை, தென்னைவள அபி விருத்தி ஒன்றியம் என்ற நிறுவ னத்தின் நிலைப்பாட்டை உறுதிப் படுத்துகின்றது.

முதல் முறையாக ஒன்றியம் குடாநாட்டில் 8000 பனம் நாற்று களை பல்தரப்பட்ட அமைப்புக்கள் ஊடாக நாட்டியுள்ளது. இன்று வரை தமக்கென பனைப் பண் ணைகள் இல்லாதிருந்து வந்த தெங்கு, பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங் கள், தமக்குச் சொந்தமாக பனைப் பண்ணைகளை உருவாக்க ஒன்றியம் முழு ஒத்துழைப்பு வழங் கிவருகின்றது. இச்செயற் திட்டம் மூலமாக எதிர்காலத்தில் பனந் தொழில் வல்லுநர்கள் பெரும் பயனை அடைவார்கள்.

இன்றுவரை முறைக்கள்ளு, முறைப்பதநீர், உற்பத்தி முறைக ளால் ஒடுக்குமுறைக்கு உள்ளாகி யும், தொழில் வருமானம் பாதிப் புக்குள்ளாகியும் வரும் பனம் தொழில் வல்லுநர்கள் மீதான ஒடுக்குமுறை, வருமானப் பாதிப் புகளை முற்றாக அகற்றிவிட ஒன்



அரச அடக்குமுறைக்கு எதிராக

**நிமிரும் பனைகள்**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


றியம் செயற்திட்டத்தை முன்னெடுத்துச் செயற்படுகின்றது.

தொழில் நுட்ப வல்லுநர்களின் உதவிகளுடன் பனை ஏறும் பொறி உருவாக்கம் பனம்சீனி ஆலைகளின் பொறி உருவாக்கம் தொடர்பான முன்னெடுப்புக்களும் ஒன்றியத்தால் மேற்கொள்ளப்படுகின்றன. பனம் வெல்லம், பனம் சீனி உற்பத்திகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும் அவற்றின் உற்பத்திஇலக்கு அண்மிக்கப்படவில்லை. இப்பின்னடைவிற்கு பிரதான காரணங்களாக இருந்தவை 1991 இன் அனுபவங்களால் இனங் காணப்பட்டுள்ளன.

அவை:-

அ) பதநீர் உற்பத்தியில் பனந்தொழில் வல்லுநர்கள் அனைவரும் ஈடுபடவில்லை.

ஆ) தரமற்ற பதநீர் உற்பத்தியும் பதநீரில் கலப்படம் நிகழ்ந்தமையும்.

இ) உபகரணங்கள், கொள்கலன்கள், இரசாயனப் பொருட்கள், எரிபொருட்கள், விறகு என்பவற்றின் தட்டுப்பாடு.

ஈ) உற்பத்தி சார்ந்த பணியாளர்களிடம் போதிய தொழில் நுட்ப அறிவின்மை காணப்படுகின்றமை.

உ) உற்பத்திகள் திட்டமிட்டு உரிய நேரத்தில் சந்தைப்படுத்தப்படாமை.

இங்கு இனங்காணப்பட்ட இக்குறைபாடுகளை நடப்பாண்டில் நிவர்த்தி செய்து தொழில் வல்லுநர்களின் பூரண ஒத்துழைப்போடு உற்பத்தித் திட்டங்களை முன்னெடுப்போமாயின் ஒன்றியம், அதன் உச்சப் பயன்பாட்டைப் பெறமுடியும் என்ற உறுதிப்பாட்டை நிலைநிறுத்துகின்றது.

தமிழீழத்தின் தேசியப் பொருளாதாரத் தூண்களாக விளங்கும் பனை, தென்னைவள அபிவிருத்திகள், பயன்பாடுகளுக்கு அனைவரும் ஒத்துழைப்போமாயின் நாம் எதிர்நோக்கும் பொருளாதாரத் தடைகளை உடைத்தெறிதல் இலகுவாகும். எமது அன்றாட உணவுத் தேவைகளை இவ்வளங்களில் இருந்து நாம் பூர்த்தி செய்வதோடு, எமது பொருளாதாரத்திலும் வலுவுள்ளவர்களாகத் திகழ்வோம். ■

# மக்களின் கதை

வரலாறு என்றால் மன்னர்களினதும் அரண்மனைகளினதும் மாடமாளிகைகளினதும் கதை என்றொரு அபிப்பிராயம் உண்டு. ஆனால் உண்மையில் வரலாறு என்பது மன்னர்களின் கதையல்ல. அது மக்களின் கதையாகும்.

தமிழ் மக்களுக்கு எதிரான வரலாற்றை உருவாக்கும் பொருட்டு இனவாத கண்ணோட்டமுடைய வரலாற்று ஆசிரியர்களும் அரசும் முன் வைக்கும் கருத்து என்னவெனில் ஈழத்தமிழர்களுக்கு பெரும் மன்னர்கள் ஆண்ட வரலாறு இல்லை என்பதாகும்.

அதாவது சிங்களவர்களைப் பொறுத்தவரை - விஜயன் தொடங்கி தேவனம்பியதீசன் உட்பட விஜயபாகு, பராக்கிரமபாகு ஈறாக 2000 (இரண்டாயிரம்) ஆண்டுகளுக்கும் மேற்பட்ட காலத்திற்கு மன்னர்களின் தொடர்சங்கிலி காட்டப்படுகின்றது. அதற்கென ஒரு தொடர்ச்சியாக அநுராதபுரம், பொலநறுவை, கண்டி, தம்பதெனிய, கோட்டை என இராசதானிகளும் காட்டப்படுகின்றன.

இவ்வாறு தொடர்ச்சியான மன்னர்களின் வரலாறு தமிழர்களுக்கு இல்லை எனவும், இவ்வாறு பேணப்பட்ட இராசதானிகளின் வரலாறு தமிழர்களுக்கு இல்லை எனவும் கூறி தமிழர்கள் இந்த மண்ணில் சொந்த வரலாறு அற்றவர்கள் என சிங்களப் பேரினவாத வரலாற்று ஆசிரியர்களும் விளக்குகின்றனர்.

ஆனால் இது இனவாதத்திற்குச் சேவகம் செய்யும் ஒரு பிழையான கருத்தோட்டமேயாகும். உண்மையில் ஒரு மக்கள் கூட்டம் எந்த மன்னர்களினால் ஆளப்பட்டது என்பதல்ல முக்கியம். மக்கள் கூட்டம் வாழ்ந்ததா இல்லையா என்பதே முக்கியமானதாகும்.

குறிப்பாக சிங்களவர்கள் பல நூற்றாண்டுகளாக ஐரோப்பிய மன்னர்களால் ஆளப்பட்டார்கள். அதன் அர்த்தம் இந்த நாட்டில் சிங்களவர்கள் இல்லை என்பதல்ல. இதேபோல உலகின் பல்வேறுபகுதிகளும் பல்வேறு படையெடுப்பாளர்களினால் ஆளப்பட்டதுண்டு. அதற்காக படையெடுத்த மன்னர்களை வரலாற்று புருசர்களாகக் கொண்டு மக்கள் வரலாறு நிராகரிக்கப்படுவதில்லை.

இவ்வாறே ஈழத்திலும் தமிழ் மன்னர்களும் தமிழ் மக்களும் பல்வேறு காலகட்டங்களில் பலரால் ஆளப்பட்டிருக்கலாம். எமக்கு அது முக்கியமல்ல. தமிழ் மக்கள் இந்த மண்ணில் வாழ்ந்தார்களா? இல்லையா என்பதே முக்கியமானதாகும்.

கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இலங்கைத் தீவில் தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இங்கு தமிழ் மக்களுக்கென ஒரு கதை - வரலாறு உண்டு.

பரவைக் கடலில் மீன்பிடிப்பது தொடக்கம் குளங்களைக் கட்டி விவசாயம் செய்வது உட்பட கிணறுதோண்டி நீர் பாச்சியது ஈறாக கைவினைப் பொருள்கள் தயாரித்தமை, கால்நடைகள் வளர்த்தமை என்பன உள்ளடங்க இன்று நவீன வள்ளங்கள், உழவு இயந்திரங்கள், நீரிறைக்கும் கருவிகள் வரை ஒரு நீண்ட வரலாறு தமிழர்களுக்கு இந்த மண்ணில் உண்டு.

தமிழ் மக்கள் இந்த மண்ணில் தமக்கே உரிய பழமொழிகளையும், கலை, பண்பாட்டு அம்சங்களையும் கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். தமக்கெனத் தனித்துவமான உணவு வகைகளையும், விழாக்களையும் கொண்டுள்ளார்கள். மேலும் தமக்கே தனித்துவமான வாழ்க்கைமுறை, சம்பிரதாயங்களைக் கொண்டுள்ளார்கள். இதுதான் மக்களின் கதை.

இந்த மண்ணில் தாம் வாழ இயற்கையுடன் மட்டுமன்றி அன்னியர்களுடனும் பொருதியுள்ளார்கள். எனவே மன்னர்களினதும், அரண்மனைகளினதும் கதையல்ல, மக்களின் கதையே வரலாறாகும். ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# ஐதீகத்தை உடைப்போம்

சிங்கள பௌத்தர்கள் ஒரு பொய்யான ஐதீகத்தின் (MYTHOLOGY) மூலம் தம்மத்தியில் தேசிய உணர்வை பெறுவதுடன் மட்டுமல்லாமல் ஏனைய இனங்கள் மீது சிங்கள பௌத்த மேலாண்மையை நிலைநாட்டுகின்றனர்.

ஐதீகங்கள் ஒரு போதும் வரலாறு ஆகிவிடாது. ஆனால் இங்கு ஐதீகத்தை மையமாகக் கொண்டு அவர்கள் ஒரு வரலாற்றைக் கட்டியெழுப்பியுள்ளனர். இது பல்வகை ஊடகங்கள் ஊடாக சாதாரண பாமர சிங்கள மக்கள் மத்தியில் ஆழமாக வேரூன்றி விட்டது. ஒருசில சிங்கள வரலாற்று ஆய்வாளர்கள் தமது அறிவியல் நேர்மையுடன் வரலாற்று உண்மைகளை கண்டறிந்து சிங்கள பௌத்த ஐதீகத்தை நிராகரித்து உள்ளார்கள் என்பதும் உண்மைதான். ஆனால் இந்த வரலாற்று ஆசிரியர்களின் கருத்துக்கள் ஆங்கிலத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. சிலநூறு பிரதிகள் மட்டுமே அச்சிடப்படுகின்றன. அத்துடன் இந்த நூல்களைக்கூட துறைசார்ந்த சில விரல் விட்டு எண்ணக் கூடிய படிப்பாளிகள் மட்டுமே அறிந்து கொள்கின்றனர். ஆங்கிலம் தெரிந்த அனைவரும் கூட இவற்றையெல்லாம் படிப்பதென்றில்லை.

அதேவேளை அரசும் பௌத்த நிறுவனமும் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தைப் பேணுவதில் அக்கறையுடன் காணப்படுகின்றன. அரசியல் தீர்மானங்கள் அனைத்தும் பேரினவாத கண்ணோட்டத்துடன் பார்க்கப்படுகின்றன. வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் இவ்வகையிலேயே பயன்படுத்தப்படுகின்றன.

பாடவிதானங்கள்கூட சிங்கள பௌத்த மேலாதிக்கக் கருத்துக்களையே நிலைநிறுத்தக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றினால் மக்கள் மத்தியில் நிலைபெற்ற கருத்தாக பொய்யான ஐதீகம் உண்மை வரலாறு என்ற வடிவத்தில் இடம் பெற்றுவிட்டது.

உண்மையில் இந்தப் பொய்யைக் களைவது என்பது ஓர் அரசியல் கலாச்சாரப் போராட்டமாகும். மேலும் பெரும்பான்மையான சிங்கள புத்திஜீவிகள் கூட அரசிடம் உத்தியோக உயர்வு, உயர் கல்வி வாய்ப்பு, வெளிநாட்டு பிரயாண வசதிகள் என்பவற்றிற்காக தங்கியிருக்கின்றார்கள். இதனால் அரசைத் திருப்புவதற்காக இத்தகைய பொய்யான ஐதீகங்களை நியாயப்படுத்துகின்றார்கள்; வளர்த்து வருகின்றார்கள். அதாவது இங்கு கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் பொய்யான வரலாற்று ஐதீகம் வளரக்கூடிய ஓர் அரசியல் சமூக நிர்மாணிப்பு இருக்கிறது என்பதேயாகும். அதாவது அரசியல் கட்டுமானம் பொய்யை வளர்ப்பதற்கான கட்டுமானமேயாகும்.

உதாரணமாக, எவ்வாறு அரச செய்தி ஸ்தாபனங்களும் அமைப்புகளும் சமகால செய்திகளை அப்பட்டமான பொய்யாகச் சொல்கின்றனவோ அதைவிட மோசமாக கடந்த கால விடயங்கள் பற்றி அவற்றால் பொய் சொல்ல முடியும்.

இவ்வகையில் இந்தப் பொய்யான ஐதீகத்தின் அடிப்படையிலான வரலாற்றிற்கு எதிரான போராட்டம் தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்தின் ஒரு முக்கியமான அம்சமாகும்.

இப்பொய்யில் இரட்டை அம்சங்கள் உள்ளன. ஒன்று சிங்கள மக்கள் மத்தியில் பொய்யான வரலாற்றின் மூலம் அவர்களை தேசிய எழுச்சிக்கு உள்ளாக்குவது. இரண்டாவது அப்பொய்யை தமிழர்கள் மத்தியில் கூறி தமிழர்கள் வரலாற்றுரீதியில் பலவீனமானவர்கள் என்ற மனோநிலையை ஏற்படுத்துதல்.

இந்தப் பொய்யின் முதலாவது அம்சத்திற்கு எதிராக நாம் பாரிய வெற்றியை உடனடியாக அடைய முடியாது. ஆயினும் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ள பொய் வரலாற்றில் இருந்து அவர்களை விடுவிக்க முடியும்.

இந்தநிலையில் தமிழ் மக்கள் தமது உண்மையான வரலாற்றையும் இலங்கைத் தீவின் உண்மையான வரலாற்றுப் போக்கையும் கற்று அறிந்து கொள்ளுதல் தமிழ்த் தேசிய நிர்மாணிப்பிற்கான முன் நிபந்தனை என்பதில் சந்தேகமில்லை.

இவ்வகையில் சிங்கள வரலாறு கூறும் ஐதீகக் கதைகளை அதிலுள்ள முற்றுமுழுதான பொய்களை ஆதாரபூர்வமாக அம்பலப்படுத்துவதுடன் தமிழ் மக்களை அவர்களின் உண்மை வரலாற்றுப் போக்கில் சரிவர அடையாளம் காட்டுவதும், கற்றறிந்து கொள்வதும் அத்தியாவசியமானதுமாகும். ■

இவ் இதழின் முன் அட்டைப் படத்துக்கு உங்கள் சிந்தனையில் தோன்றும் எண்ணங்களை கவிதையாக எமக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

ஆசிரியர்குழு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தமிழீழ வரலாறு கண்ட வீரப் பரம்பரை

க. சொக்கலிங்கம்
'சொக்கன்'

## சங்கிலியன் முதல் பிரபாகரன் வரை

உண்மையை நாடிச் செல்லும் யாத்திரை மிகவும் புனிதமானது. இந்த யாத்திரையிலே ஈடுபடுபவன் உண்மை என்ற தெய்வத்திற்கு ஒவ்வாத பொய்மைகளையே வழிபட்டு அவற்றிற்கு அடிமைப்படாது தன்னைக் காத்துக்கொள்ளல் மிகவும் இன்றியமையாதது. 'பொய்யாமை பொய்யாமை ஆற்றுதல்' என்ற திருவள்ளுவர் வாக்கு, உண்மைக்கு உண்மையாக நடப்பதை வற்புறுத்துகிறது என்றும் கொள்ளலாம். சிறப்பாக ஒரு நாட்டினதோ, ஓர் இனத்தினதோ வரலாற்றினை எழுத முற்படுபவன் பொய்மைக்கு மறந்தும் இடமளிக்க முற்படுவானானால், அவன் எழுதும் வரலாறு நன்மைக்குப் பதில் நாசத்தையே விளைவிக்கும். கடந்த காலங்களில் இலங்கையின் வரலாற்றை எழுதியவர்களிற் பலரும் இத்தகைய பொய்களையே பெருக்கி, உண்மைகளைச் சுருக்கிய பணியின் பயனையே இன்று நாடு அநுபவிக்கின்றது.

புதைபொருள் ஆராய்ச்சிக்குப் பதிலாக பல சந்தர்ப்பங்களிலே பொருள் புதை ஆராய்ச்சிகளும் நிகழ்ந்ததுண்டு. பேரினவாத சார்பினால் தமிழ்த் தேசிய இனத்தின் பாரம்பரியமும், தொன்மையும், சிறப்புக்களும் குழி தோண்டிப் புதைக்கப்பட்டன. தமிழர் சிங்களவருக்குப் பல நூற்றாண்டுக்குப் பின்னரே இங்கு வந்து குடியேறினர் என்று பொய்ம்மைக்கு உண்மை மெருகேற்றும் முயற்சிகள் தலையெடுத்தன. ஆனால் அண்மைக்கால வரலாற்றாய்வுகள், புதையுண்டிருந்த உண்மைகள் பலவற்றை வெளிக்கொண்டு வந்துள்ளமை மகிழ்ச்சி தருவதாகும்.

### இலங்கையின் ஆதிக்குடிகள்

"…. ஆனால் தொல்லியல் நோக்கில் ஈழவரலாற்றையும் மகாவம்சம் கூறும் விஜயனின் கதையையும் ஆராய்ந்த சேனரத்தின (Senaratne, 1969) வடநாட்டிலிருந்து சிங்களம் குடிபெயர்ந்ததற்கு எவ்வித சான்றும் இல்லை என்று எடுத்துக் காட்டினார். இவரைத் தொடர்ந்து அண்மையில் குணத்திலகா (Gunatilake, 1980) இந்நாட்டின் வரலாற்றுக்கால நாகரீக வளர்ச்சிக்கு வித்திட்டவர்கள் வெறும் கற்பனையில் உள்ள விஜயனும் அவன் கூட்டத்தினருமல்ல என்றும், தென்னிந்தியாவைப் போன்று பெருங்கற்காலப் பண்பாடே (Megalithic Culture) என்றும் எடுத்துக்காட்டியுள்ளார். சுருங்கக் கூறின் ஈழ நாகரிகத்தின் தோற்றத்திற்கு வித்திட்டது பெருங்கற்காலப் பண்பாடே எனலாம்.

"நம் நாட்டுப் பெருங்கற்காலப் பண்பாட்டைத் தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டின் அம்சமாகவே கொள்ளக் கிடக்கின்றது. தென்னிந்தியாவில் இதன் தோற்றத்தைக் கி. மு. 1000 ஆண்டளவுக்கு எடுத்துச் சென்றாலும் ஈழத்தில் இது கி. மு. 7ம் நூற்றாண்டளவில் பரவியிருக்கலாம் என றோமிலா தாபர் (Thaper Romila, 1975) கருத்துத் தெரிவித்தாலும் கூட, இதற்குச் சற்று முன்னுள்ள ஒருசில நூற்றாண்டுகளிலாவது இங்கு பரவியிருக்கலாம் என்பதற்கு வரலாற்று, தொல்லியல் சான்றுகள் துணைபுரிகின்றன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஈழத்திலும் இப்பண்பாடு பரந்திருந்தது என்பதை வெளிக்காட்டும் விதமாக அநுராதபுரம், மாதோட்டம், திஸ்ஸமஹாரகம, கந்தரோடை, ஆனைக்கோட்டை ஆகிய முக்கிய வரலாற்றுக்கால இடங்களின் அடித்தளங்களில் இப்பண்பாட்டுச் சின்னங்கள் காணப்படுவதோடு இதனைச் சேர்ந்த தாழிக்காடுகளும் கல்லறைகளும் புத்தளம், அநுராதபுரம், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, திஸ்ஸமஹாரகம, மொனராகலை, மாத்தளை, கேகாலை ஆகிய மாவட்டங்களிலும் காணப்படுகின்றன. புத்தளம் மாவட்டத்திலுள்ள பொன்பரிப்பு என அழைக்கப்படும் தாழிக்காட்டில் அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புக் கூடுகளை ஆராய்ந்த அறிஞர் கென்னடி (Kennedy, 1975) இம்மக்கள் தென்னிந்தியாவில் தற்கால திராவிட மொழிகள் பேசும் கூட்டத்தினரின் மூதாதையரே எனக் கருதினர். இவருக்கு முன்பு மாதோட்டத்தில் வெளிக்கொணரப்பட்ட எலும்புக்கூட்டை ஆராய்ந்தோர் (Chanmugam & Jeyawardane, 1954) இதுவும் தென்னிந்திய மனித வர்க்கத்தை ஒத்தது என்றனர்.

தொடக்கத்தில் ஈழம் எனவே பெயர் பெற்று அப்பெயர் காலப்போக்கிலே திரிந்து இலங்கையாகியது என வரலாற்றாசிரியர் சிலர் கருதுகின்றனர் இந்நாட்டின் ஆதிக்குடிகள் திராவிட இனத்திரான தமிழரே என்பது, மேற்குறித்த கூற்றினால் நன்கு புலப்படுகின்றது. இன்று வடக்கிலும் கிழக்கிலும் தாம் இழந்த மண்ணினை மீட்டெடுக்கப் போராடுவோரின் முன்னையோர் கிறிஸ்துவுக்கு எட்டு, ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே ஈழமாகிய இலங்கை எங்கணும் வாழ்ந்தனர் என்பதை நினைவு கூர்வது மிகவும் பொருத்தமானதே. அதனோடு மகாவம்சம் கூறும் விஜயனும் அவன் தோழர்களும் இங்கு குடியேறியது கி.மு. 6ம் நூற்றாண்டு என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். (ஆனால் விஜயன் வரலாறு ஒரு கற்பனைக் கதை!)

## ஈழத்தமிழ் வீரர் பரம்பரை வாழ்ந்த பிரதேசங்கள்

"அச்சம் என்பது மடமையடா
அஞ்சாமை திராவிடர் உடமையடா"

எனும் குறிக்கோளை முன்வைத்துக் காலந்தோறும் ஈழத்தின் தொல்பெருங் குடிகளான தமிழ் மக்கள், மண்ணாசையோ பிற ஆசைகளோ மிக்குத் தம்மை எதிர்த்த பகைவர்களோடு வீரச்சமர் புரிந்து தாங்கள் மாவீரர் என்பதை நிறுவியிருப்பர் என்பது உண்மையானாலும் இடைக்கால வரலாறுகள் பேணப்படாமையாலோ, தமிழர் வாழ்வில் மங்குதசை ஏற்பட்டமையாலோ அவை எமக்குச் சான்றுகளோடு கிடைக்கவில்லை.

யாழ்ப்பாண அரசு நிலவிய காலத்திலும் பின்னரும் எழுதப்பட்ட வரலாறு சார்ந்த இலக்கியம், அவற்றிற்கு முற்பட்ட காலம் பற்றிய தெளிவில்லாத சில செய்திகளையே நினைவுகூர்கின்றது. யாழ்ப்பாணத்தை ஆண்ட கதிரமலை அரச பரம்பரை பற்றியும், சோழ இளவரசர் வருகை பற்றியும், குருடனான இசைக்கலைஞன் (யாழ்பாடி) கதிரைமலை அரசனிடம் இருந்து மணற்றிடலைப் பரிசு பெற்றது பற்றியும் கூறுவன, இவ்வாறான தெளிவற்ற கருத்துகளுட் சிலவாகும். யாழ்ப்பாணத்தின் பழமையான கடந்த காலம் பற்றி ஒருவர் பெறக்கூடியன இவை மட்டுமே.

யாழ்ப்பாண வரலாறு பற்றிய இலக்கியச் செய்திகள் இவ்வளவு தாம் என்றால் இலங்கையின் வரலாற்றுத் தொடக்கத்திலிருந்து நீண்டதொரு காலப் பகுதியைத் தருவது என்று வரலாற்றாளர் பெருமையோடு கூறிக்கொள்ளும் மகாவம்சமோ யாழ். குடாநாடு பற்றிக் கூறுவது மிக மிகச் சொற்பம்!

அநுராதபுரத்தினை மையமாகக் கொண்டனவும், இலங்கை வரலாற்றினைக் கூறும் அதிகாரபூர்வமானவையும் எனக் கொள்ளப்படும் பாளி மொழிப் பழம் வரலாற்று நூல்களோ ஆங்காங்கு நாகதீபப் பிரதேசம் பற்றியும், குறித்த சில பௌத்த தூபங்களின் ஆக்கம் பற்றியுமே குறிப்பிடுகின்றன.

எனவே, தொல்லியற் பொருள்களையும் சின்னங்களையும் கொண்டே நிறுவ வேண்டிய பல உண்மைகள் இன்னும் மறைப்பிலேயே உள்ளன என்பது தெரிகிறது. இருப்பினும் ஈழத்தின் வடக்கிலே யாழ்ப்பாணக் குடாநாடு, அதனைச் சூழ்ந்துள்ள தீவுகள் என்பவற்றை உள்ளடக்கி கி.பி. 13ம் நூற்றாண்டு தொடக்கம் 16ம் நூற்றாண்டுவரை தமிழர் ஆட்சிபுரிந்தனர் என்ற அளவிலே தற்காலிகமான மனநிறைவை நாம் கொள்ளலாம். அக்காலப் பிரிவின் மாவீரனாகச் சங்கிலி செகராசசேகரன் (1519 -1561) விளங்குகின்றான்.

அடுத்து வன்னியர் என்ற வீரத்தமிழ் மறவர் வாழ்ந்த பிரதேசத்தினை நோக்கலாம். தமிழகத்தின் வடபிரிவில் இன்றும் பரந்து காணப்படுகின்றனர். சோழரது படைப்பிரிவில் சிறப்பிடம் பெற்றிருந்ததாகவும், முதலாம் இராசராசன் (985 -1016) ஈழநாட்டைக் கைப்பற்றியதை அடுத்துச் சோழப்படைகளோடு ஈழத்திற்கு வந்ததாகவும் கொள்ளப்படும் வன்னியர்குழு, மாகன் என்ற சிங்கள அரசன் காலத்தில் (1215 -1255) அவன் பிரதேசத்திலும் வன்னிகளை அமைத்து தலைமை பெற்றிருந்ததாகத் தெரிகிறது. யாழ்ப்பாணத்தில் தமிழரசர் ஆட்சி செய்த பதின்மூன்றாம் நூற்றாண்டு இறுதி தொடக்கம் யாழ்ப்பாணத்திலும் பல வன்னி நாடுகள் இருந்தன. திருகோணமலை, கட்டுக்குளம் ஆகிய கிழக்குப் பகுதிகளிலும், புத்தளத்திலும் வன்னிகள் அமைந்திருந்தன. யாழ்ப்பாணக் குடாநாட்டோடு வன்னி நாடு இணைந்திருந்த காலத்தில் அது மன்னாரிலிருந்து திருகோணமலை வரை பரந்திருந்ததாகவும் கூறப்படுகிறது. [மேற்கே கற்பிட்டியிலிருந்து செட்டிக்குளம், மாதோட்டம் முதலான இடங்களை அடக்கி, கிழக்கிலே திருகோணமலை வரை வன்னி பரந்து காணப்படுகிறது.

பெரும்பாலும் காடடர்ந்த பிரதேசத்தையே உள்ளடக்கிய வன்னிநாட்டுத் தலைவர்கள் சங்கிலி செகராசசேகரனின் வீழ்ச்சிக்குப் பின்னர் அந்நிய

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ரான ஒல்லாந்தரின் ஆக்கிரமிப்புக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி நாடும் மானமும் சுதந்திரமும் காத்திடும் பணியிலே ஈடுபட்டதாகத் தெரிகின்றது. இம்மாவீரர்களிலே கைலாயவன்னியன் (17ம் நூற்றாண்டு), பண்டாரவன்னியன் (18ம் நூற்றாண்டு) ஆகியோர் ஈடு இணையற்றவர்கள்.

ஈழத்தமிழகத்தின் கீழ்பால் அமைந்த மட்டக்களப்பு தமிழர் பிரதேசமும் இதன் வரலாற்றுப் பழமையும் பலவகையான கற்பனைகளால் திரிபடைந்து காணப்படுவதால் இங்கு தோன்றிய மாவீரர் பற்றிய செய்திகள் கிடைக்கவில்லை. யாழ்ப்பாண வரலாற்றின் மங்கலான செய்திகள் சிலவற்றையாவது 'யாழ்ப்பாண வைபவ மாலை' மூலம் அறிவது போல மட்டக்களப்பு வரலாற்றினைச் சிறிதளவு அறிய 'மட்டக்களப்பு மான்மியம்' என்ற நூல் உதவலாம். எனினும் அது போதியதன்று.

## சுதந்திர உதயமும் ஈழத்தமிழர் நிலையும்

1948 பெப்ரவரி 4ந் திகதி இலங்கை ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்றது. 'மக்களால் மக்களுக்கு மக்களின் ஆட்சி' என்ற குறிக்கோள் கொண்ட சனநாய ஆட்சி மலர்ந்தது என இலங்கையர் மகிழ்ந்தபொழுது அந்த மகிழ்ச்சியிலே ஈழத்தமிழரும் பங்கு கொண்டனர். ஆனால் 'சனநாயகம் என்பது பெரும்பான்மை மக்கள் தமிழ்த் தேசிய இனத்தை அடக்கி ஒடுக்கி ஆளுவதே' என்று அதற்குப் புதியதொரு வியாக்கியானம் தந்து பேரினவாதிகள் தலைவிரித்தாடித் தமிழர்களை நசிக்க முற்பட்ட பொழுது தான் தமிழ் ஈழத்தவர் தமக்கு நேரவிருக்கும் ஆபத்தை உணரமுடிந்தது. தேசியம் என்ற பெயரால் பௌத்த சோஷலிச சனநாயக அரசுப் பிரகடனம், சிங்கள மொழியை ஆட்சி மொழியாக்கல், பொருளாதாரப் புறக்கணிப்பு, மலையகத் தமிழரின் பிரசா உரிமை பறிப்பு, கல்வியில் தரப்படுத்தல், விகிதாசார உத்தியோக நியமனம், தமிழ் மண்ணிலே சிங்களக் குடியேற்றம் என்று இனவெறி நச்சரவு தனது கொடிய நாக்கினை வெளிப்படுத்திச் சிறுபான்மையினரைச் சிறப்பாகத் தமிழரை பரிநாசம் செய்ய முற்பட்டது.

## ஈழத்தமிழரின் அரசியல் ரீதியிலான எதிர்ப்புக்கள்

ஒரு நாட்டின் தலைவன் என்பவன், அந்த நாட்டின் எல்லா இன மக்களதும் நன்மைகளை மனத்திற் கொண்டு அவற்றிற்கான திட்டங்களை வகுத்து நிறைவேற்றவும் தியாகங்கள் புரியவும் தயங்கான். ஆனால் அரசியல்வாதியோ தனது நலன்களை மனத்திற் கொண்டு அவை நிறைவேறுவதற்கான வழி வகைகளை ஆராய்ந்து நிறைவேற்றவே முனைவான். இவ்வாறு நிறைவேற்றுகையில் இனங்களிடையே முரண்பாடுகளையும், கலகங்களையும் உண்டாக்கவும் அவன் தயங்கமாட்டான். யுக்தியானவையும், சூழ்ச்சி

### காவல் அரண்கள்



மீட்கப்பட்ட தமிழ் மண்ணில்
எனது சைக்கிள் உருண்டோடும்.
கடல் மூச்சின் வாடைக் காற்று
எனது முடியையும்
எனக்கு மேல் ஒடிக் கழியும்
தென்னை முடிகளையும்
வகிடு அழித்து மயில் தோகையாக்கும்
முன்னிரவிலும்
பின்னர் ஓர்
நள்ளிரவிலும்,
தெருவிளக்கின் மதிலோரம்
ஏந்திய துப்பாக்கிகளும்
இரண்டு விழிகளும்
தெரியும்.
வெறிச்சோடிய தெருக்களின் பகற்பொழுதில்
பழுத்த இலைகள் உதிர்ந்துகிடக்கும்
மங்கல் மூலைகளில்
மணற் சாக்குகளுடன்
மூன்று புறமும்
துப்பாக்கி முனை தெரியும்.
மீசை கறுக்காத
இளம் வைரங்களில்,
தமிழ்
ஆசைக் கனவெலாம் விழிகொள்ளும்
எனது சைக்கிள்
உருளும்,
இன்னும் உருளும்.

- சண்முகம் சிவலிங்கம் -
'நீர் வளையங்கள்' கவிதைத் தொகுப்பிலிருந்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நிறைந்தவையுமான கருத்துக்களை தனது நாவன்மையாலும், எழுத்து வன்மையாலும் மக்களிடையே பரப்பித் தனது பதவியை என்றும் நிலையாகப் பாதுகாப்பதே அவனது குறிக்கோளாய் விளங்கும். துரதிஸ்டவசமாக ஈழத்திலே நாட்டுத் தலைவர்களுக்கு (Statesman) இடம் இல்லாது அவ்விடத்தை அரசியல் வாதிகளே (Politicians) நிரப்பிக் கொண்டனர். இதனால் தேசியம் என்ற பெயரில் பேரினவாதப் பேயே உருக்கொடுத்து விடப்பட்டது. அதன் கோரத் தாண்டவத்தினைத் தமிழ் தேசியவாதிகள் உணர்ந்து கொண்டாலும், அதன் அவ்வப்போதைய தலுக்கு மினுக்குகளில் மயங்குவதும், தெளிவதும் தெளிந்த பின்னும் சரியான முறையில் நடவடிக்கை எடுக்காமையுமாகிய குறைபாடுகளால் ஈழத்தமிழினத்திற்கு எவ்வித விடிவும் காணமுடியவில்லை. மேடைப் பேச்சுக்கள், பாராளுமன்ற விவாதங்கள், பத்திரிகைப் பிரசுரங்கள், சாத்வீகப் போராட்டங்கள், ஸ்ரீ அழிப்புக்கள், மாநாடுகள், தீர்மானங்கள், ஒப்பந்தங்கள், அமைச்சரவையில் இடம் பெற்று ஒத்துப்போய்க் கருமத்தை முடிக்கும் முயற்சிகள் என்று இவர்கள் கையாண்ட தந்திரங்கள் எல்லாம் பேரினவாதப் பேயின் முன் செயலிழந்து போயின. சமஸ்டி ஆட்சி அல்லது பிரிந்து போதல் என்ற முடிவும் நிறைவேறாது தொடக்க நிலையிலேயே தேங்கி நின்றது. வேறுவகையில் சொல்வதானால் இவர்கள் சிங்களப் பேரினவாதிகளின் ஏமாற்று வித்தைக்குப் பலியாயினர் என்றே சொல்ல வேண்டும். இலங்கையிலே ஈழத் தமிழினம் எதிர்நோக்கவிருக்கும் அவலங்களைத் தீர்க்க தரிசனத்துடன் உணர்ந்து, அவற்றைப் போக்க திரிகரணசுத்தியோடு பாடுபட்ட தந்தை செல்வா கூட நம்பிக்கையிழந்து 'தமிழரை இனிக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்' என்று கூற நேர்ந்தது.

ஆனால், தமிழ் இளைஞர்கள் தமது எதிர்காலத்தைக் கடவுளின் கைகளிலே விட்டுவிட்டுச் சும்மா இருக்கத் தயாராயில்லை. 'மயிலே மயிலே இறகு போடு' என்று வேண்டுவதால் மயில் இறகு கிடைத்துவிடாது என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள். எனவே ஆயுதம் ஏந்திப் போராடியே இழந்த உரிமைகளைப் பெறலாம் என்ற உண்மையை உணர்ந்துகொண்டு அந்த வழியிலே துணிந்து குதித்தனர்.

விடுதலைப் போராட்ட இயக்கங்கள் பல உருவெடுத்தன. இவற்றிற் பலவும் சாண் ஏறி முழம் சறுக்கிய வேளையிலே, போராட்டத்தினை முனைப்புடனும் சத்திய நேர்மையுடனும் நடத்தத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் முனைந்தெழுந்தது.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்" என்ற குறிக்கோள் வாசகத்தை முன்வைத்து இந்த மண்ணின் வீர இளைஞர்களும் வீராங்கனைகளும் களத்திலே குதித்தார்கள். நாளுக்கு நாள் போராட்டம் முனைப்படைந்து வெற்றிப்பாதையில் அடி அடியாக அவர்கள் முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தியாகக் களவேள்வியைத் தொடக்கி வைத்த வீரத் திருமகன் வேலுப்பிள்ளை பிரபாகரன் (26-11-1954) என்பதை இன்று உலகமே அறிந்து கொண்டுவிட்டது. ஏற்றுக் கொண்டும் விட்டது.

(தொடரும்...)

# எங்களின் இளைய வீரர் கனவு பலிக்கும்



தமிழீழத்திலிருந்து
ஒரு போராளியின் தந்தை
எழுதிய கடிதத்திலிருந்து......

.....**வீணாகக்** கவலைப்பட்டு என்ன பிரயோசனம்; அம்மா சுகமாக இருக்கிறா. அம்மாவைப் பற்றி யோசிக்க வேண்டாம், ஒரு குறையுமில்லாமல் நான் பார்த்துக் கொள்வேன். தம்பியின் மூன்றாமாண்டுத் திதி 17.03.1992இல் வருகின்றது. இந்தமுறைத் திதி முந்தி வருகுது. ஆனால் அவர் இறந்தது ஐயனார் கோயில் தேரிலன்று. அதேமாதிரி இந்த முறையும் சுண்ணாகம் ஐயனார் கோவில் தேர்வருகிற செவ்வாய்க்கிழமை. 17.03.1992; அன்றுதான் சரியாக அவருடைய திதி. நட்சத்திரம் மகம், எல்லாம் வருகுது திகதி மட்டும் அடுத்த 21.03.1992 சனிக்கிழமை, இந்தமுறையும் நாங்கள் வடிவாகத் தம்பியின் திவசம் செய்கின்றோம். ஓரளவுக்கு அயலவர்கள், நண்பர்கள், தம்பியின் தோழர்கள் எல்லோருக்கும் அன்று மதிய போசனம் கொடுக்கின்றோம். அவருடைய தியாகத்துக்கும் அவருடைய தேசப்பற்றுக்கும் நாங்கள் அவரை நினைவு கூரத்தான் வேண்டும்.

**நாட்டுக்காக இந்தச்சின்ன வயதில் தன்னையே அர்ப்பணித்த மாவீரன் அவர்.** ஆகவே அவருக்கு நாங்கள் செய்ய வேண்டியது இதுதான். நாங்கள் எல்லோரும் கோப்பாய் மயானத்துக்குப் போய் அங்கும் அவருக்கு அஞ்சலி செய்ய நினைத்திருக்கின்றோம். அதில் நாங்கள் அன்று போய் அவருடைய பெட்டிக்கு மாலை போட்டு சாம்பிராணி கொளுத்தி அஞ்சலி செய்ய நினைத்திருக்கின்றோம். அதோடு நான் முன்கூட்டியே யோசித்து அவருடைய ஆஸ்தி எடுத்து வைத்திருக்கின்றேன். நீங்கள் வரும்போது காட்டுவதற்கென்று. அதிலும் கொஞ்சம் கொண்டுபோய் அவருடைய கட்டிடத்துக்குள் போட்டுவிட இருக்கின்றேன். இந்தக் காட்சியை படமெடுத்து உங்களுக்கு அனுப்புகிறேன். எதிர்பாராத நிகழ்விது, இப்படி மற்றவர்களுக்குக் கிடையாது. இதிலிருந்து அவருடைய தியாக உணர்வும், நாட்டுப் பற்றும், வீரமும் தெரியும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




காற்றை எதிர்த்துக் கொண்டு சைக்கிளை மிதிப்பது பெரும் சங்கடமாக இருந்தது. "என்ன செய்வது எங்கடை காலம் இப்பிடி இருக்கு" என மனம் சலித்துக் கொண்டான் கந்த சாமி.

கால்கள் இரண்டும் பயங்கரமாக வலித்தன. நெஞ்சில்கூட விபரிக்க முடியாத ஒரு வகை வேதனை பரவியது. வியர்வையில் குளித்திருந்த உடம்பு படபடத்தது.

கூதல் காற்று சில்லென்று வீசியது. அடிவானத்தில் சூரியன் சரிந்துகொண்டிருக்க மெல்லிருட்டின் ஊடே பனி இறங்க ஆரம்பித்திருந்தது.

நேரம் ஆறு மணி அல்லது ஆறரையாக இருக்கலாம். மாரி காலத்து சூழல் இருளை விழுங்கிக் கொண்டு வந்துவிட்டது. பெரும் மலையென சைக்கிளின் பின்புறம் கனக்கும் சுமை, அவன் களைத்துப் போனதால் முன்பை விட அதிகமாக வருத்தியது.

எத்தனை நாட்களாக இந்த ஓட்டம் நடக்கிறது. பொழுது புலரும் பொழுதில் வெறும் வயிறு கர் புர் எனச் சத்தமிட புறப்பட்டுப் போவதும் பின்னர் சுமையோடு திரும்புவதும், வழக்கமாகிவிட்டது.

சாவகச்சேரி, கொடிகாமம், பளை என்று எத்தனை இடங்களுக்கு மாறி மாறி ஓடி வீதிகள், ஒழுங்கைகள் என்று தடவித் தடவி. விறகாக, தென்னை, பனை மட்டைகளாக பொச்சு மட்டைகளாக, தேங்காய்களாக சுமையேற்றி ஓடாத ஓட்டம் ஓடி கோப்பாய் வெளி தாண்டி மருதனாமடச் சந்தி, சுண்ணாகம், மல்லாகம் வரை வரவேண்டும்.

மத்தியான வெய்யில் உடம்பைப் பொசுக்கும் நேரத்தில், சுமைகளை ஏற்றிக் கொண்டு புறப்பட்டால் பருத்தித்துறை துறைமுகத்திற்கு உணவுக் கப்பல்கள் வருவது போல எப்போதாவதுதான் வரும் வழியில் வியாபாரம் நடக்கும். மற்றப்படி மருதனாமடம் சந்திவரை வியாபாரம் நடக்காது.

ஒருநாள் முழுக்க சைக்கிள் அடிப்பதன் பலன் அன்றைய விற்பனையில்தான் தங்கியிருக்கும். அதன் பின்னர் ஏதாவது வயிற்றுக்குக் கிடைக்கும்.

ஒரு வடையும் கடித்து தேனீரும் குடித்து பீடியும் வாங்கி புகைத்துக் கொண்டு வீதியோரத்து மரநிழலில் ஆறி இருக்கும் போது சற்று ஆறுதலாக இருக்கும். பிறகு மீண்டும் பயணம் தொடங்க திரும்ப கால்கள் வலிக்கும்.

●●●

இப்போது போலத்தான் இருக்கின்றது; என்றாலும் ஒன்றரை வருடங்கள் ஓடிவிட்டன. நெடுநாள் குடியிருந்த சொந்த இடத்தைவிட்டு வெளியேறி மல்லாகத்தில் விரிந்து பரந்த அந்த வளவுக்குள் மொட்டையாகிப் போய்விட்ட தென்னை மரங்களின் மத்தியில் சின்னப்பிள்ளைகள் விளையாட்டுக் கட்டும் சின்னஞ்சிறு குடிசைகளில் குடியிருந்தார்கள். தலையைத் தட்டும் கூரை, சிறுமழைக்கே பயப்படும் ஓலைத்தட்டிகள் கொண்ட நெருக்கமான குடிசைகள். மிக மிக அதிகமான மனிதர்களும் நெருங்கிய மனங்களும்.

அவன் குடும்பத்தைப் போல எத்தனையோ குடும்பங்கள். எல்லை வேலி சரிந்ததுக்கு வாள்வெட்டுக்கு போனவர்களின் பரம்பரையினர் எல்லாம் ஒரே வளவுக்குள் எப்போதாவது சிறு சிறு சண்டை பிடித்தாலும் குடியிருந்தார்கள்.

அந்த வளவில் முந்தி இந்திய இராணுவம் குடியிருந்தது. ஒரு பெரிய வீடும் இருந்தது. ஆனால் கூரையும், சில பக்கத்துச் சுவர்களும் இந்திய இராணுவம் திரும்பிப் போனபோது போய்விட்டன.

அவர்கள் சூறையாடிய அமைதியோடு வளவின் பசுமையும் போயிருக்க வேண்டும். எத்தனையோ பெரிய மரங்கள் அடியோடு தறிக்கப்பட்ட அடையாளங்கள் மாத்திரம் இருந்தன.

# வீடு

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

வெளிச்சம் - தமிழீழம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கண்டிப்பான தன்மை என்பது இராணுவக் கட்டுப்பாட்டின் ஓர் இயல்புத் தன்மையே. எந்த நாட்டிலானாலும் சரி இராணுவக் கட்டுப்பாட்டுக்கென்று சில தனித் தன்மைகள் உண்டு. கம்யூனிச நாடாகட்டும், சனநாயக நாடாகட்டும் இராணுவக் கட்டுப்பாடு எந்த இடத்திலும் தனி இயல்பு கொண்டதாகவே இருக்கும். எந்த இராணுவத்தின் நடவடிக்கையையும் கவனியுங்கள். விளைவுகளைப் பற்றி கவலைப்படுவதில் அல்ல, வெற்றியை அடைவதிலேயே அது கண்ணும் கருத்துமாய் இருக்கும். இராணுவ நடவடிக்கைகளில் "வெற்றியே" எல்லாவற்றையும் விட முக்கியமானது. இன்னொன்று, நாம் மக்களுக்காக போராடும், மக்களின் நம்பிக்கைக்குரிய போராளிகள். எம்மை மதிப்பாய்வு செய்கிறவர்கள் எதிரிகளோடு மோதும் எங்கள் இரக்கமற்ற தன்மையைச் சுட்டிக் காட்டுகிறார்கள். "இரக்கமற்ற தன்மையையே" வடிவமாகக் கொண்ட எதிரிகளோடுதான் நாம் மோதுகிறோம் என்பதை மறந்து விடுகிறார்கள். நாங்கள் அவர்களை அன்போடு அணுக முடியுமென்று நினைக்கிறீர்களா? முடியாது, இதுதான் உண்மை. ஆனால் உண்மையில் நடைமுறையில் நாங்கள் அறப்பண்பும், ஒழுங்குணர்வும் அமைந்தவர்களாகவே இருக்கிறோம்.

நல்ல கட்டுப்பாட்டில் நம்பிக்கை உள்ள தலைமை ஆசிரியரின் கீழ் கட்டுப்பாடுகள் மிக்க ஒரு பள்ளிக்கூடம் இருக்குமானால் அங்கே பயிலும் மாணவர்கள் நல்ல கல்வி பெற்று வாழ்வில் உயர் நிலை அடைவார்கள். ஆசிரியரும், குறிப்பாக தலைமை ஆசிரியரும் கட்டுப்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் சில பள்ளிக் கூடங்கள், முதல் தரப் பள்ளிக்கூடங்களாய் மக்களால் கணிக்கப்படுவதை நீங்கள் அறிவீர்கள். அப்படிப்பட்ட தலைமை ஆசிரியருக்குக் கீழே பயின்று, ஒவ்வொரு ஆண்டும் வரிசை வரிசையாக வெளியேறும் மாணவர்கள் பிற்காலத்தில் சிறப்புடன் வாழ்க்கை நடத்துவதையும் கண்டிருப்பீர்கள். எங்கள் நிலையிலும் இந்த உவமை பொருந்தும். இதனால்தான் நாங்கள் கட்டுப்பாட்டிற்கு முதலிடம் தருகிறோம்.

தலைவர். வே. பிரபாகரன்.

சொந்த இடத்தைவிட்டு ஓடி வந்து முதலில் இங்கேதான் குடிசைகள் போட்டு குடியேறினார்கள்.

எல்லாக் குடும்பங்களும் இப்படியே நிவாரணத்திலும், சைக்கிளில் மூட்டைகட்டி, வியாபாரம் செய்து கிடைக்கும் வருமானத்திலும்தான் சீவியம் நடத்தின.

●●●

கந்தசாமியின் சிறுவீடு ஆலமரத்திற்கு முன்னால் இருந்தது. ஆலமரத்திற்குப் பக்கத்தில் தான் ஒரு வாசிகசாலை. எந்த நேரமும் அந்த இடத்தில் ஊர் ஆட்களின் அமளி இருக்கும். மாலை நேரங்களில் இன்னும் மும்முரமாய் இருக்கும்.

ஓலைக் கூரையும், சீமெந்துக் கற்சுவருமாக சோலையான வளவுமாக அமைந்ததுமான சூழல். பொழுது மங்கும் நேரம் வேலையை முடித்துக் கொண்டு வந்து களைப்புத் தீரக் குளித்துவிட்டு திண்ணையில் சரிந்திருக்கும் போது எவ்வளவோ சந்தோஷமாக இருக்கும். ஆனால் இப்போது எல்லாமே குழம்பிப் போய்விட்டன. வீடு, சோலையான வளவு, ஆலமரத்தடி, அந்த சந்தோஷம் எல்லாமே அந்நியமாகிப் போய்விட்டன. நாளாந்தம் பார்த்து வந்த தொழிலும் போய், போட்ட உடுப்புக்கூட கனவாகிவிட்டது.

●●●

இன்றைய கெடுகாலம். எதுவுமே நேர காலத்துக்கு சரிவரவில்லை. கொள்வனவு முடியவே நேரமாகிவிட்டது. புறப்படவே மூன்று மணியாகி, வழியில் பிரச்சனை.

இரண்டு தடவை சைக்கிள் காற்றுப் போய்விட்டது. ரயர் ஒட்டுக்கு இருபது ரூபாய் சுலபமாய் செலவழிந்தது. கையில் ஒரு சதமும் இல்லாத நிலையில் புறப்பட்டு, கோப்பாய் வெளி தாண்டவே இருள ஆரம்பித்து விட்டது.

இன்றைய வியாபாரம் அதோகதிதான் என்பது அப்போதே தெரியும். பொழுதுபடத் தொடங்கிவிட்டால் வியாபாரம் நடக்காது.

நான்கு நாட்களுக்கு முதல் எடுத்த நிவாரணப் பொருட்கள் நேற்றைக்கே முடிந்துவிட்டன. மத்தியானச் சாப்பாடு ஏதோ ஒரு விதத்தில் முடிந்திருக்கும். இரவுச் சாப்பாட்டு விடயம் அவன் வீடு போன பின்னர் தான் முடிவாகும்.

நினைத்துப் பார்க்க எரிச்சலாக இருந்தது. அன்று முழுவதற்குமாக குடித்த தேனீர் எந்த மூலைக்கு காணும். என்ன செய்வது? கொண்டு வந்தவற்றை அநியாய விலைக்கு விற்க முடியாது. இரவுப் பொழுதை எப்படியும் சமாளிக்கத்தான் வேணும் என நினைத்தான்.

ஊர்வலம் போனமாதிரி சைக்கிள்கள் போய்க் கொண்டிருந்தன. மருதனாமடச் சந்திக்கு வந்தபோது இருள் கனத்திருந்தது.

சந்தியில் பெற்றோல்மாக்ஸ் விளக்கு ஒன்று எரிந்து கொண்டிருந்தது. ஆட்கள் பலபேர் வேலை செய்துகொண்டிருந்தார்கள். இளைஞர்கள், வயதானவர்கள் என்று. சிலபேர் கிடங்கு கிண்டிக்கொண்டிருக்க, வேறுசிலர் மாட்டு வண்டிகளில் இருந்து மரங்களை இறக்கிக் கொண்டிருந்தார்கள்.

பள்ளிக்கூடச் சுவரில் மாவீரர்கள் ஆகிவிட்ட சில போராளிகளின் பெரிய படங்கள் சாத்திவைக்கப் பட்டிருந்தன.

வரும் வழிகளில் எல்லாம் இவ்வாறு சந்திக்குச் சந்தியும், இடை இடையேயும் சனங்கள் வேலை

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

செய்து கொண்டிருப்பதையும், பந்தல்கள், வளைவுகள் அமைத்துக் கொண்டிருப்பதையும் கண்டாலும் கந்தசாமியின் மனநிலை காரணமாக அவற்றில் அதிக அக்கறை காட்டவில்லை.

●●●

ஓலைக் குடிசைகளால் நிரம்பி வழிந்த அந்த வளவுக்கு முன்னால் சைக்கிளை நிறுத்தினான் கந்தசாமி. அந்த இருளிலும் பொழுது போகாத சிறுவர், சிறுமியர் விளையாடிக்கொண்டிருந்தனர். பக்கத்தில் இருந்த அச்சகத்தில் இயந்திரம் இயங்கும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது. மின்சாரம் இல்லாவிடினும் அங்கு சைக்கிளை மிதித்து இயந்திரம் இயங்குவது அவனுக்குத் தெரியும். மண்ணெண்ணையில் மோட்டார் சைக்கிள் இயங்குவது போலத்தான் இதுவும்.

போராட்டக் காலச்சூழல் எத்தனை புதியவழிமுறைகளையெல்லாம் கண்டுபிடிக்கவைத்துவிட்டது என நினைத்தான்.

வேலிக்கரையோரம் பலபேர் குந்தியிருந்து பீடி பிடித்துக்கொண்டிருக்க சற்றுத் தூரத்தில் அரச மரத்தடியில் அமளியான வேலை நடந்துகொண்டிருந்தது. மாவீரர் வளைவொன்று தயாராகிறது போலும்.

சுமையோடு சைக்கிளை உருட்ட சிரமமாக இருந்தது. என்றாலும் தன் குடிசைக்கு முன்னால் போய் சைக்கிளை நிறுத்தினான்.

அந்தச் சின்னக் குடிசையின் வாசல் ஓரமாக மினுக் மினுக்கென்று சுட்டி விளக்கொன்று எரிந்து கொண்டிருந்தது.

எதிரே சாக்கொன்றில் மூத்தபிள்ளையும், அதற்கடுத்த பிள்ளையும் படுத்திருந்தனர்.

"இஞ்சரப்பா" என்று குரல் கொடுக்க இடுப்பில் கடைசிப் பிள்ளையைச் சுமந்து கொண்டு அவன் மனைவி வெளிப்பட்டாள். வெற்றுடம்புடன் காணப்பட்ட குழந்தையின் மூக்கு ஒழுகிக் கொண்டிருந்தது.

இருளிலும் அவனை அடையாளம் கண்டு "யப்பா" என்று மழலை மொழி பேசியபடி அவனிடம் பாய முற்பட்டது. கந்தசாமி சைக்கிளை ஸ்ராண்டில் நிறுத்தினான்.

சைக்கிளில் உள்ள சுமை, அவன் வந்த நேரம், போன்றவற்றை வைத்துக்கொண்டு அவனது நிலைமையை உணர்ந்துகொண்ட அவன் மனைவி,

"நல்லாய் களைச்சுப் போனியள். அடுப்பில சுடுதண்ணி இருக்குது. தேத்தண்ணி கொண்டு வாறன். இருங்கோ." என்று சொல்லி பிள்ளையை அவனிடம் கொடுத்துவிட்டு உள்ளே போனாள்.

அவன் படுத்திருந்த பிள்ளைகளுக்குப் பக்கத்தில் இருந்தான். சற்று ஆறுதலாக இருந்தது. ஆனாலும் மனம் ஒரு நிலையில் இல்லை.

தேநீருடன் மனைவி வந்தாள்.

"முகத்தைக் கழுவிக்கோண்டு வாங்கோ, கஞ்சி காச்சி வைச்சிருக்கு" என்றாள் ஆதரவாக.

தன் நிலையை உணர்ந்துகொண்டு கேள்விக் கணைகள் தொடுக்காமலே செயற்படும் அவளை அன்புடன் அவன் நோக்கினான். உடலில் தெம்பு பிறந்திருந்தது.

அவன் கையில் சீனி வாங்கித் தந்து தேனீர் குடிக்கும் போது,

"இஞ்சரப்பா, உங்கை ஒரு மாவீரர் வளைவு கட்டினம். எல்லா ஆம்பிளையளும் அங்கைதான் போட்டினம். வேலை செய்ய நீங்களும் போட்டு வாங்கோவன். உடம்பு அலுப்பெண்ணடாலும் நாங்களும் செய்யத்தானே வேணும்." என்றாள் அவள்.

அவன் நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான்.

"உடல் களைத்தாலும் மனம் களைக்கக் கூடாது" என்று நினைத்தபடி எழும்பினான்.

"சிவப்புச்சாறி ஒண்டும் கேட்டவை. என்னட்டை எங்கைகிடக்கு. மலரக்கா தாறனெண்டவ. அதோடை என்ர மஞ்சள் சாறியையும் சேர்த்துக் கொடுங்கோ" என்றாள் அவள். ■


வட தமிழீழ வளங்கள் பற்றிய

## புதிய கை நூல்

பொருளாதார ரீதியில் வளர்ச்சி பெறுவதற்கான வளங்களை தமிழீழம் கொண்டுள்ளதா, இங்கிருக்கும் வளங்களைக் கொண்டு ஒரு உறுதியான கட்டமைப்பினை நாம் கட்டி எழுப்ப முடியுமா இந்நூல் என்ற கேள்விகளுக்கு விடையளிக்கிறது.

உணவுத் தேவைகளும் உற்பத்தி இலக்குகளும் என்ற புள்ளி விபர தகவலைத் தருவது இக் கைநூல். தமிழீழத்திலுள்ள வளங்களைக் கொண்டு சுயசார்பு பொருளாதாரத்தினைக் கட்டி எழுப்ப நம்பிக்கை ஊட்டுவதாக இக் கைநூல் அமைந்துள்ளது.

வட தமிழீழத்தின் வளங்கள், தேவைகள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு நாம் அடைய வேண்டிய உற்பத்தி இலக்குகள் போன்ற தகவல்களையும், உணவு, வலு நுகர்வு பற்றிய விஞ்ஞான ரீதியான தகவல்களையும் உள்ளடக்கிய இக் கைநூல் தமிழீழ ஆய்வு நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.


www.tamileelamarchive.com

# தியாக வாளைத் தூக்கு

தமிழீழ ஆவணக் காப்பகம்

உயிர் நீர்க்குமிழி போன்றது; ஒருநாள் உடைந்து போகும்.
செல்வம் சகடக்கால் போன்றது; ஒருநாள் ஏறும், மறுநாள் தாழும்.
மான உணர்வைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்
சாவின் பின்னாலும் அது உன்னை வாழ வைக்கும்.
சாவுக்குப் பயந்து ஓடிக் கொண்டிரு,
அது உன்னைத் துரத்திப் பிடிக்கும்.
சிறிது திரும்பி முறைத்துப் பார்!
சட்டென்று காலில் விழுந்துவிடும்.
பயந்தவனுக்குச் சாவு என்பது முடிவுரை!
துணிந்தவனுக்கு அதுவே முகவுரை.
சாவுக்குத் தோற்பது இழிவு...
சாவைத் தோற்கடி...
அதுதான் மானத்தின் வாழ்வு.
மானத் தீவட்டியைத் தூக்கிக்கொள்
மரணம் மண்டியிட்டு வணங்கும்;
தியாக வாளைத் தூக்கிக்கொள்
திக்குகள் வளைந்து புகழ்பாடும்.



வெற்றியின் ஊர்வலம்
நீளும் நீளும்
சுதந்திர தமிழீழம்
வாழும் வாழும்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்





# சத்தியம்



பங்குனிக் கோடையின் அனல் தகிக்க
பசும் புல்லின் நுனி கருகி
நிலம் கொதிக்கும் பகல்

நிழலின்றிய வெறும் வெளியில்
வெட்டிய காப்பரணில் இருந்தேன்
காற்றில் சூடேறி மூச்சில் தீப்பிடிக்கும்
வெம்மை

உச்சி கொதிக்கிறது
வெயில் காயக் காய
மேனி எரிந்து கண் புகைந்து
இரத்தம் வற்றிப் போகும் வெயில்

வைத்திருக்கும் துப்பாக்கி சூடேறிச் சூடேற
வெயில் அடிக்கிறது.
நா வரண்டு தாகத்தில் தளர்ந்து
சோர்விழந்து சூழும் நேரமிது
என்றாலும், நகரமுடியாக் காலம்

வெயிலடிக்கும் மேனி வருந்தும்
விழியுருகி வழியும்
சூழல் எரியும்
குண்டு வெடித்து குடல் சரியும்
எதிரியின் ரவை உடலைத் துளையிடலாம்
இவை மீறி
இயல்புக்கு மீறியும் நானிருந்தேன்
வதைக்கின்ற நாட்களை விடவும்
வதை செய்யும் இராணுவத்தான் தலை
தெரியும் வரை
குறிவைக்கக் குறியுண்டே
அவன் அசைவும், அவன் அரசும்
என் நெஞ்சில் எம் வாழ்வில்
முள்ளொன்று உள்ளவரையில்
வெயில் காய்வேன்
பனியில் நனைந்து
மழையில் தோய்வேன்
தோய்ந்து தோய்ந்து எழுவேன்

எனக் கென
என் மண்ணுக் கெனவே!

- ந. காளிதாஸ்
நன்றி: விளைநிலம்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

***விடுதலைப் பாதையில் ஒரு நாள்***



# உயிர்ப்பு

அடர்ந்த காடு.

இருண்ட நெடிய பச்சை மரங்களின் வேர்களில் அவர்கள் படுத்திருந்தார்கள்.

மூன்று நாட்களுக்கு முன்பு புலிபாய்ந்தகல் முகாமில் இருந்தபோதுதான் எதிரிகளின் முற்றுகை நடந்தது.

விடுதலைப் புலிகள் எதிர்த்துத் தாக்க வில்லை.

அவர்களோடு இரண்டு காயமடைந்த விடுதலைப் புலிகளும் இருந்தார்கள்.

முற்றுகையை உடைத்துப் பின்வாங்குவதே சரி என்று பட்டது. காட்டின் உட்புறம் நோக்கிப் பாய்வதைத் தவிர வேறு வழியில்லை.

கிளாச் செடிகளின் நீண்ட முட்களையும், சொரு சொருத்த காய்ந்துபோன கழிப்பாறைகளையும், விழுந்து கிடந்து வழி மறிக்கும் பட்ட மரங்களையும் தாண்டி நடுக்காட்டுக்கு அவர்கள் வந்தார்கள்.

தீபன் படுகாயமுற்றிருந்தான். உடலில் 'சேலைன்' பாய்ந்துகொண்டிருந்தது.

புலிகள் அவனைத் தூக்கிக்கொண்டுதான் ஓடினார்கள்.

'30 கலிபர்' இயந்திரத் துப்பாக்கியால் சுடுவதில் தீபன் கெட்டிக்காரன். மட்டக்களப்பில் நடந்த பல தாக்குதல்களில் பங்குபற்றியவன்.

தாங்கமுடியாத பசியால் அவர்கள் சோர்ந்திருந்தார்கள்.

மூன்று நாட்களாக உணவில்லை. நடுக்காட்டில் உணவுக்கு எங்கே போவது? காட்டில் மறைத்து வைத்திருந்த உணவுக்களஞ்சியத்தைப் போய்ப் பார்த்துத் திரும்பிய ஒரு விடுதலைப் புலி சொன்னான்:-

"குடிலோட எரிச்சுப் போட்டானுகள், எல்லாம் சாம்பலாக் கிடக்கு!"

புலிகளில் பலர் மயங்கி விழும் நிலையில் இருந்தார்கள்.

இந்தியப் படை வெறியர்கள் தங்கள் இடத்தைக் கண்டு பிடித்துவிடக்கூடும் என்று நினைத்ததால் வேட்டைக்குக்கூட யாரையும் அனுப்ப முடியவில்லை. கடைசியில் சோர்ந்து கிடந்தவர்களில் ஒருவன் சொன்னான்:-

"மச்சான் றெஜி! நீ போய் என்ன இழவெண்டான்ன சுட்டுட்டு வாடாப்பா. பட்டினியிலே உயிரே போயிடும்போல கிடக்கு."

றெஜி பேர்போன வேட்டைக்காரன்.

ஆனால்....

சவம்போல் விழுந்து கிடக்கிறான். எழுந்து உட்கார முடியாமல் இருக்கிறவனால் எப்படி வேட்டையாட முடியும்?

தீபனின் கண்களில் நீர் தளதளத்தது.

மரத்திலிருந்து காய்ந்த இலைகள் ஒன்றிரண்டு உதிர்ந்து விழுந்தன. ஓர் ஓணான் எங்கிருந்தோ சருகுகள் மேல் தொப்பென்று பாய்ந்து சரசரத்து ஓடிற்று.

தீபன் தனது மருத்துவரான விடுதலைப் புலி ஜேசுதாசை அழைத்துச் சொன்னான்:-

"எனக்கு ஏத்த இருக்கிற 'சேலைன்' போத்தலை றெஜிக்கு ஏத்தினா, அவனுக்குச் சக்தி வரும். அவன் போய் வேட்டையாடி வரலாம்"

புலிகள் அசந்து போனார்கள்.

ஒரே ஒரு 'சேலைன்' போத்தல் மட்டுமே எஞ்சியிருக்கின்றது. 'சேலைன்' ஏற்றாவிட்டால் தீபனின் உயிர்.....!

தீபன் கொஞ்ச நேரம் அமைதியாக இருந்தான். பின்பு திரும்பவும் ஜேசுதாசைப் பார்த்துச் சொன்னான்:-

"எதுக்கு வானத்தைப் பார்க்கிறீங்க? 'சேலைன்' எனக்கு ஏத்தினா நான் ஒருவன்தான் பிழைக்க முடியும். ஆனால் றெஜிக்கு ஏத்தினீங்க எண்டா அவன் வேட்டைக்குப் போய் இறைச்சி கொண்டு வந்தா இஞ்ச இருக்கிற எல்லாரையுமே காப்பாத்தலாம்."

தீபன் பிடிவாதமாக இருந்தான். புலிகள் கண்களில் நீர் பனிக்கிறது.

தீபனின் 'சேலைனை' அவர்கள் றெஜியின் உடலில் பாய்ச்சினார்கள்.

நிமிர்ந்து எழுந்து உட்கார்ந்து துப்பாக்கியோடு வேட்டைக்குத் போனான் றெஜி.

அன்றிரவு றெஜி கொண்டுவந்த இறைச்சியைச் சாப்பிட்டுத்தான் அவர்கள் பசி தீர்த்தார்கள்.

இரண்டு நாட்கள் தீபன் 'சேலைன்' இல்லாமலே இருந்தான். தூரத்தில் அவர்களின் முகாம் ஒன்றிலிருந்து 'சேலைன்' வரும்வரை தாய்க் கோழியை வளைத்து உட்காரும் கோழிக்குஞ்சுகளைப் போலவே விடுதலைப் புலிகள் தீபனைச் சூழ்ந்திருந்தார்கள்.

தீபன் உயிர் பிழைத்தான்.

ஆனால்.....

பின்பு ஒருநாள் இந்திய ஆக்கிரமிப்புவாதிகளுக்கு எதிரான சண்டை ஒன்றில் எதிரிகளுடன் வீராவேசமாக மோதிய போரில் வீரமரணத்தைத் தழுவினான் தீபன்.

இன்றும்......

அந்தப் பசிய மரங்களையும், தடித்த வேர்களையும், காய்ந்து பரவிக்கிடக்கும் சருகுகளையும் அந்த இடத்தை.... அந்த இடத்தை....... மறக்க முடியவில்லையே.....! ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# வன்னியில் மலையக மக்களின் வாழ்க்கை



## ஒரு கண்ணோட்டம்

ஆங்கிலேயரினால் பெருந்தோட்டத் தொழில் துறைக்காக 19ம் நூற்றாண்டில் பல ஏமாற்றுக் கதைகள் கூறி இங்கு அழைத்துவரப்பட்டார்கள். மலைக்காடுகளில் அடிமைகளைப் போலவே வேலை வாங்கப்பட்டார்கள். போதிய வருமானமின்றியும் நெருக்கடியான "லயன்" எனப்படும் குடியிருப்புகளிலும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். பெருந்தோட்டத் துறையின் இலாபத்தை "துரை"மார் சுரண்டிக் கொண்டார்கள். குறைந்த பட்சம் கல்வி வாய்ப்போ அடிப்படை மருத்துவ வசதியோ கூட இவர்களுக்கு வழங்கப்படவில்லை. சுருக்கமாகக் கூறினால் உயிர் வாழ்வதற்கு மட்டுமே ஊதியம் வழங்கப்பட்டது.

### பிரித்தானியர் வெளியேற்றமும் மலையக மக்களின் நிலையும்

"சட்டியில் இருந்து அடுப்புக்குள்" என்பது போல முன்னரைவிட மிக மோசமான ஒடுக்குமுறைக்குச் "சுதந்திரத்தின்" பின் ஆளானார்கள். முதலாவது பொதுத் தேர்தலில் மலையக மக்கள் 7 (ஏழு) உறுப்பினர்களைத் தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்பினார்கள். 1948ல் டி. ஸ். சேனாநாயக்கவினால் வாக்குரிமையும், குடியுரிமையும் பறிக்கப்பட்ட பின் அரசியல் பிரதிநிதித்துவத்தை இழந்தார்கள். இந்த மனிதர்கள் மனிதராகவே மதிக்கப்படவில்லை. நோயோடும், பட்டினியோடும் புதிய எஜமானர்களுக்காக மலைத் தோட்டங்களில் உழைத்தார்கள்.

### இனக்கலவரமும் மலையக மக்களும்

1958இல் இருந்து தொடர்ச்சியாக 1978, 1981, 1983 எனத் தொடர்ந்த இனக்கலவரங்களினால் மலையக மக்கள் சொல்லொணாத் துன்பங்களுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். கல்வியறிவின்மையும், தோட்டங்களின் தனிமைப்படுத்தப்பட்ட நிலையும் இந்நிகழ்வுகளை வெளியுலகின் கவனத்திற்கு வராமல் கூடுதலாக இருட்டடிப்புச் செய்தன. இந்த மக்களுடன் நேரடியாக உரையாடியபோதுதான் இனக்கலவரங்கள் இவர்களிடம் ஏற்படுத்திய ஆழமான உடல், உளத் தாக்கங்களை உணர முடிந்தது. இன்று நெடுங்கேணிப் பகுதியில் வாழும் இராமையா என்ற முதியவர் 1977களில் சிங்கள இன வெறியர்களினால் தமது லயன்களும், உடைமைகளும் எரியூட்டப்பட்டதையும் -தாமும் தமது பெண்களும் மிக மிக மோசமான சித்திரவதைக்கு உள்ளானதையும் இத்தனை வருடங்கள் கழிந்த பின்னரும் நேற்று நடந்தது போல - இன்று வரை தன்னால் மறக்க முடியவில்லை என மனம் குமுறினார். சிங்கள இனவெறியர்கள் பச்சிளம் குழந்தைகளைக்கூட விட்டுவைக்கவில்லை என வேதனையுடனும் கண்ணீருடனும் குறிப்பிட்டார்.

### வடக்கு நோக்கிய இடம் பெயர்வு

ஒரு நூற்றாண்டுக்கும் மேற்பட்ட நீண்டகாலத் தொடர்ச்சியாகத் துயரம் நிறைந்த வாழ்வும் -

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சிங்கள இன வெறியர்களின் வன்முறைகளையும் தொடர்ந்த இந்த மக்கள் மலையகத்தை விட்டு வடக்கே இடம்பெயரத் தொடங்கினர். 1958ல் சிறித ளவில் ஆரம்பித்த இந்த நிலை 1977இலும் 1983இலும் பெருமளவுக்கு அதிகரித்தது.

ஒரு புறம் தமிழர் தாயகத்தில் சிங்கள மக்களை 40 களில் இருந்தே வலிந்து குடியேற்றி மண்ணை அபகரித்து வந்தது சிங்கள அரசு, மறுபுறம் மலையக மக்கள் தமிழர் தாயகத்தில் தாமாகக் குடியேறவிடாமல் தடுத்தது. வடதமிழீழப் பகுதியில் சிங்கள அரசின் பொலிஸ், இராணுவ செயற்பாடுகள் இருந்த காலத்தில் தாம் பலவந்தமாக வெளியேற்றப்பட்டதையும் இம்மக்கள் நினைவு கூர்ந்தனர். இத்தனை இடையூறுகளுக்கும் முகம் கொடுத்தபடி - துயரம் தோய்ந்ததுதான் தமது வரலாறு - என மனதைத் தேற்றியபடி சிறிது சிறிதாக வன்னிப் பெரு நிலப்பரப்பில் இவர்கள் குடியேறினார்கள்.

## குடியேற்றம் நிகழ்ந்த பகுதி

இந்தக் குடியேற்றங்கள் நிகழ்ந்த பகுதிகள் வரண்ட மேட்டுநிலங்களாகவே அமைந்திருந்தன. வயற்காணிகள் இவர்களுக்குச் சொந்தமாகக் கிடையாத நிலையே இன்றும் நிலவுவதை இவர்கள் சுட்டிக் காட்டினார்கள். மேட்டுக்காணிகளிலும் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளக்கூடியதாய் கிணற்று வசதியோ, நீர் இறைப்பு இயந்திரமோ இவர்கட்கு கிடையாது.

## கூலித் தொழில்

**வ**ன்னிப் பிராந்தியத்தில் குடியேறிய இந்த மக்களைப் பொறுத்தவரை பிரதான தொழில் - வயல்களிலும் தோட்டங்களிலும் கூலித் தொழில் செய்வதாகும். இங்கு வேதனை என்னவென்றால் வாழிடம் மட்டுமே மாறியது. ஆனால் வாழ்க்கை நிலைமை மாறவில்லை. மலையகத்திலும் இவர்களின் உழைப்பு இவர்களுக்கு முழுமையாகக் கிடைக்கவில்லை. வன்னிப்பகுதியிலும் இந்த நிலையில் பெரிய மாற்றம் நிகழ்ந்து விட்டதாய் கூறமுடியாது. உழைப்பாளிகளான இவர்களுக்கு நிலம் சொந்தமாக இல்லை. வன்னியில் நில உடமையாளர்களின் நிலங்களில் கூலிக்காக உழைக்கும் நிலையே நீடிக்கின்றது.

## போர்க்கால நெருக்கடி

1990 யூன் போர்க்கால நெருக்கடியைத் தொடர்ந்து இவர்களின் வாழ்க்கை நிலைமை மிக மோசமடைந்தது. இவர்களின் கூலித்தொழில் வாய்ப்புக்கள் அனைத்துமே எரிபொருள் தடையினால் கூடியளவுக்கு அற்றுப் போய்விட்டன. நிலஉடமையாளர்களைப் பொறுத்தவரை பயிர்ச்செய்கையை குறைந்தளவில் மேற்கொண்டார்கள். வாழ்க்கையை ஓட்டக்கூடியதாக இருந்தது. ஆனால் மலையக மக்களைப் பொறுத்தவரை இவர்கட்கு சொந்தநில மற்ற நிலையும், இருக்கும் நிலத்தில் சாதாரண காலங்களில்கூட பயிர் செய்யமுடியாத நிலையும் நிலவின. அப்படியிருக்கும்போது போர்க்கால நெருக்கடியினால் மிக மோசமான முறையில் பாதிப்படைந்துள்ளார்கள். சிலர் முகாம்களை நோக்கி இடம் பெயர்ந்து விட்டனர். இதன் தவிர்க்க முடியாத விளைவாக வன்னிப்பகுதியில் மலையக மக்கள் மத்தியிலேயே மிகக் கூடியளவில் போசாக்கின்மையை காணமுடிகின்றது. குறிப்பாக பள்ளி முன்னிலைச் சிறார்கள், குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார் மத்தியில் கூடுதலாக அவதானிக்க முடிந்தது. மேலும் இவர்களின் குழந்தைகளைப் பொறுத்தவரை பாடசாலைக் கல்வியில் ஒப்பீட்டளவில் கூடுதலான வரவின்மையும் -அக்கறைக் குறைவும் காணப்படுவதாய் பல ஆசிரியர்கள் அவதானித்துச் சுட்டிக்காட்டினார்கள். இந்தக் குழந்தைகள் மத்தியில் இருந்து விரல் விட்டு எண்ணக் கூடியோரே உயர் கல்வியைப் பெறுவதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பாடசாலைக் கல்வியை இடையில் கைவிடும் நிலையும் கூடுதலாகக் காணப்படுகின்றது.

"தாம் அனைவரும் சூழலின் உருவாக்கமே" இவ்வகையில் போதிய வருவாயின்மையும், போசாக்கின்மையும் உட்பட வாழ்வின் நெருக்கடிகளினால் இந்த மக்களினதும் - அவர்களின் அடுத்த சந்ததியினரதும் வாழ்க்கை பாதிக்கப்பட்டு வருவது வேதனையானதே. ■

## போகும்வழி தூரமில்லை!

போகும் வழி தூரமில்லை!
புறப்படுங்கள் தோழர்களே!
வேகமாய் நடந்திடுவோம்!
வெற்றிகளைக் குவித்திடுவோம்!

உள்ளத்தில் துணிவிருக்க
ஒற்றுமை உணர்விருக்க
கல்லிருள் சூழ்ந்து வரக்
காற்றுமழை சீறிவரத்
தொல்லைகள் நேர்ந்தாலும்
தொடர்ந்தே நடந்திடுவோம்.

மாங்குயில் பழனி. சுந்தரேசன் அவர்களின் "ஒரு தெருப்பாடகனின் பாடல்கள்" என்ற கவிதைத் தொகுப்பிலிருந்து.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# செக்கோஸ்லவாக்கியா : சமாதானமான விவாகரத்து

திலகர்

இன்றைய உலகில் மனிதனுக்கு தேவையாக இருப்பது தேசிய அரசே." கடந்த வாரம் சுவிற்சலாந்து நகரமான பாசலில் கிழக்கு மேற்கு ஆய்வு நிறுவனத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட மகாநாடு ஒன்றில், முன்னாள் யூகோஸ்லாவியாவில் உருவான ஸ்லோவேனியா எனும் புதிய நாட்டின் ஜனாதிபதி மிலான் குச்சன் இவ்வாறு முழங்கிய போது கரகோசம் வானைப் பிளந்தது. 19 ஆம் நூற்றாண்டுக் காலத்தில் ஐரோப்பிய தேசிய அரசுகள் (Nation States) தோன்றின. இவை நடைமுறையில், பெரும்பான்மைத் தேசிய இனத்தின் அரசுகளாகவே இருந்தன. மொழி, இன, மத அடிப்படையில் உருவான தனித் தேசிய இனங்களின் அரசுகளாக இருந்ததில்லை. தற்போதுதான் அத்தகைய நிகழ்வுகள் நடக்கின்றன. கிழக்கு ஐரோப்பாவில் தனித் தேசிய இனங்கள் தமக்கென நாடுகளை உருவாக்கிக் கொண்டிருப்பது புதியதொரு பரிமாணமாக காணப்படுகின்றது.

அதே வேளை, கூட்டுப் பொருளாதார நலன்கள், திறந்த சந்தைப் பொருளாதாரம் ஆகியவை தேசிய எல்லைகளைக் கடந்து, பல நாடுகளை உள்ளடக்கும் தன்மை வாய்ந்ததாகவும், பரந்த தேசியம் (Transnationalism) அல்லது உயர் தேசியம் (Supranationalism) என்ற விரிவுபட்ட தேசியத்தை கொண்டு வருவதாகவும் அமைகின்றன. தனித் தேசிய இனங்கள் தமக்கென நாடமைக்கும் நிகழ்வுகளுக்கும், விரிவுபட்ட தேசியத்தை அமைக்கும் முயற்சிக்கும், இடையிலான முரண்பாடு கூர்மையடைந்து வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இவ்விரண்டு நிகழ்வுகளுக்கும், அதன் முரண்பாடுகளுக்கும் தளமாக ஐரோப்பாக்கண்டம் சிறந்த உதார



மெசியர்: ஸ்லாவியத் தலைவர்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ணமாக விளங்குகின்றது. ஐரோப்பிய சமூகத்தின் ஒருங்கிணைப்புக்கு எதிராக டென்மார்க் மக்கள் வாக்களித்தமையையும், செக்கோஸ்லவாக்கியா என்ற நாட்டிலிருந்து ஸ்லாவியக் குடியரசு பிரிந்து போவதற்கு ஸ்லாவிய மக்கள் வாக்களித்தமையையும் அண்மைக்கால இரண்டு உதாரணங்களாக கொள்ளலாம். இவை இரண்டும் ஒரு மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், ஜனநாயக வாக்களிப்பின் மூலம், குடிமக்களின் ஒப்புதலின் மூலம் நிகழ்ந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. கடந்த வருடம் நெதர்லாந்திலுள்ள மாஸ்ரிட் (Maastricht) நகரில் நடைபெற்ற ஐரோப்பிய சமூக நாடுகளின் மகாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை அங்கீகரிக்க டென்மார்க் மக்கள் மறுத்துள்ளனர். வாக்களித்த டென்மார்க் மக்களின் 50. 3% ஆனோர் ஐரோப்பிய சமூக இணைப்புக்கு எதிர்ப்பு தெரிவுத்துள்ளனர். இந்நூற்றாண்டு முடிவுக்குள் ஐரோப்பிய சமூக நாடுகளிடையே பொருளாதார, நிதிய இணைப்பை (Monetary Union) ஏற்படுத்துதலே மாஸ்ரிட் தீர்மானமாகும். பின்னர் அதனை இராணுவ, பாதுகாப்பு இணைப்பாகவும் (Defense Union), ஐரோப்பிய சமஸ்டியாகவும் (Eurofederalism) வளர்த்துச் செல்வதே ஐரோப்பிய சமூக நாடுகளில் பெரும்பாலானவற்றின் நோக்கமாக இருந்தது. ஆயினும் பலமற்ற சில சிறிய நாடுகள் தமது தேசியத்தை பாதுகாக்கவும், தமது தனித்த அடையாளத்தை நிலைநிறுத்தவும் எண்ணம் கொண்டன. மேலும் பலம் பொருந்திய தேசங்களால் தாம் சகல விதத்திலும் விழுங்கப்பட்டு விடுவோம் என்றும் பயந்தன. அப்பயத்தின் விளைவே, டென்மார்க் மக்கள் ஐரோப்பிய சமஸ்டிக் கொள்கைக்கு எதிராக வாக்களித்தமையாகும். ஆயினும் டென்மார்க்கில் இன்னொரு குடியொப்பத்தை வைப்பதன் மூலம், ஐரோப்பிய சமூகத்தில் முழு நிலை அங்கத்தவராக தொடந்திருக்கவும், மாஸ்ரிட் தீர்மானத்துக்கு ஒத்துப்போகவும் முயற்சிகள் இடம் பெற்று வருகின்றன. அதேவேளை சுவீடன், பின்லாந்து, சுவிற்சலாந்து, ஒஸ்ரியா ஆகிய நாடுகள் ஐரோப்பிய சமூகத்துள் புதிதாக இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளன. தற்போது 12 ஆக உள்ள அச்சமூகம், மேலும் விரிவடைந்து மிகப் பெரும் ஐரோப்பிய வல்லரசாக மாறுவதே அதன் இறுதி இலட்சியமாக உள்ளது. இப்பாதையில், மேற்கு ஐரோப்பிய யூனியன் என்ற இராணுவ அமைப்பு, ஐரோப்பிய சமூகத்தின் இராணுவப் பாதுகாப்பு அமைப்பாக தனித்துவம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வளர்ச்சி அமெரிக்காவின் தலைமையிலான நேட்டோ (NATO) இராணுவ அமைப்புக்கு எதிர் அமைப்பாக உருவாகலாம் என்றும் அஞ்சப்படுகின்றது.




பிரியும் செக், ஸ்லாவியக் குடியரசுகள்

தேசிய இனங்கள், ஓர் அரசுக்குள் புதிய அரசுகளை உருவாக்கும் போக்கில், தற்போது முக்கியத்துவம் பெறுவது செக்கோஸ்லவாக்கியாவாகும். 74 ஆண்டுகளாக செக் மக்களும், ஸ்லாவிய மக்களும் ஒரு அரசினுள்ளே வாழ்ந்துள்ளனர். செக்கோஸ்லவாக்கியா, ஜேர்மன் கிட்லரால் கைப்பற்றப்பட்டு, 1944 ஆம் ஆண்டு சோவியத் யூனியனின் செம்படையால் விடுவிக்கப்பட்டு, அதனைத் தொடர்ந்து சோவியத் யூனியனின் மேலாதிக்கத்திற்கு உட்பட்ட காலங்களில், ஒரே நாடாகவே விளங்கியது. 1968 ஆம் ஆண்டு சோவியத்தின் ஆதிக்கத்திற்கெதிராக செக்கோஸ்லவாக்கிய மக்கள் தலைநகரான பிராக்கில் கிளர்ந்த போது (Prague Spring) அதற்குத் தலைமை தாங்கியவர் ஒரு ஸ்லாவியரே. அவர்தான் டியூப்செக் என்பவர். பின்னர் சோவியத் யூனியன் சிதறுண்ட போது, அதன் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட செக்கோஸ்லவாக்கியா தற்போது இரு நாடுகளாக பிரியும் தறுவாயில் உள்ளது.

சமஸ்டி ஆட்சி முறையைக் கொண்ட செக்கோஸ்லவாக்கியாவில், அண்மையில் செக், ஸ்லாவியா ஆகிய சமஸ்டிக் குடியரசுகளின் பாராளுமன்றங்களுக்குத் தேர்தல் நடைபெற்ற போது, ஸ்லாவியக் குடியரசில் பிரிவினையையும், தனிநாட்டையும் வலியுறுத்திய கட்சிகளே வெற்றி பெற்றுள்ளன.

யூன் முதல் வாரத்தில் நடைபெற்ற தேர்தலில் சுதந்திர ஸ்லோவாக்கியத் தனிநாட்டைத் தேர்தல் ஆணையாக முன்வைத்த கட்சிகளே ஸ்லாவியக் குடியரசில் வெற்றி பெற்றுள்ளன. பெரும்பான்மை இடங்களைக் கைப்பற்றி முதலாவதாக வந்த ஜனநாயக ஸ்லோவாக்கியாவிற்கான இயக்கத்தின் (Movement for Democratic Slovakia) தலைவர் மெசியர் (Meciar) ஸ்லோவாக்கிய இறைமையை, சுதந்திரத்தைப் பிரகடனம் செய்து, தமக்கென்றொரு அரசியல் யாப்பை ஏற்படுத்தி, தமது ஜனாதிபதியை தெரியப் போவதாக அறிவித்துள்ளார். இது தற்போது இருக்கும் செக்கோஸ்லவாக்கிய அரசியல் யாப்புக்கும், அதன் ஜனாதிபதி வக்லாவ் காவலுக்கும் (Vaclav Havel) எதிராக புரட்சிக் கொடி தூக்குவதாக இருக்கின்றது. ஆயினும் செக்

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


குடியரசானது, ஸ்லாவிய மக்களின் குடியொப்பத்திற்கு மதிப்பளிக்கும் என்றும், தனது குடியரசோடு இணைத்து வைப்பதற்காக போரில் ஈடுபடாது என்றும் நம்பப்படுகின்றது. செக் குடியரசில், நாட்டின் ஒற்றுமையையும், பிரதேச ஒருமைப்பாட்டையும் வலியுறுத்திய கட்சிக்கே பெரும்பான்மையான செக் மக்கள் வாக்களித்தனர். ஆயினும் ஸ்லாவியக் குடியரசில் இப்பிரிவினைக்கு ஆதரவாக வாக்களித்த ஸ்லாவிய மக்களின் சுயநிர்ணய உரிமையே இங்கு ஏற்றுக்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. இத்தீர்ப்பை சர்வதேச சமூகமும் ஏற்றுக்கொள்ளப் போகின்றது. ஒரு நாட்டின் பிரிவினைக்கு இருபகுதி மக்களும் சம்மதிக்க வேண்டும் என்ற வாதத்தை இவ்வுதாரணம் தவிடுபொடியாக்கியுள்ளது. இப்பிரிவினைக்கு மொழி வேறுபாடும் (செக் மொழி, ஸ்லாவிய மொழி) மத வேறுபாடும் (செக் மக்கள் மத நம்பிக்கை குறைந்தவர்களாகவும், ஸ்லாவிய மக்கள் றோமன் கத்தோலிக்கர்களாகவும் இருப்பது) பொருளாதார ஏற்றத் தாழ்வும் காரணமாக கூறப்படுகின்றது. தமது பொருளாதாரத் தாழ்விற்கு, செக் குடியரசுடன் இணைந்து ஒரு நாடாக இருப்பதே காரணம் என்று ஸ்லாவியா மக்கள் நம்புகின்றனர். 53 இலட்சம் மக்களை கொண்ட ஸ்லோவாக்கியா எனும் புதிய நாடு மிக விரைவில் உருவாகுவதுடன், பல வருட காலமாக சமஸ்டி ஆட்சியில் நிலவிய கூட்டு வாழ்வும் சமாதான ரீதியாக இல்லாது போய்விடும். ஆயினும் பொருளாதாரம், பாதுகாப்பு, நிதியம் ஆகியவை தொடர்பாக இணைப்பை ஏற்படுத்துவதாக, புதிய ஒழுங்கு முறைகளை அமைத்துக் கொள்ளலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்படுகிறது.

செக் குடியரசுத் தலைவர்களுக்கும், ஸ்லாவியக் குடியரசுத் தலைவர்களுக்கும் இடையில் நடைபெற்ற சமாதானப் பேச்சு வார்த்தையில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது. செக் குடியரசு, ஸ்லாவியக் குடியரசு தனிநாடாகப் பிரிந்து செல்வதை அங்கீகரித்துள்ளது. தனிநாடாகப் பிரிந்து செல்லாமல் ஒரு கூட்டமைவாக (Confederal) இரு குடியரசுகளும் ஓர் அரசிற்குள் இருக்கலாம் என்ற செக் குடியரசின் கோரிக்கையை ஸ்லாவியக் குடியரசு ஏற்க மறுத்துள்ளது. அதேவேளை, பொருளாதாரம், பாதுகாப்பு ரீதியாக இரண்டு சுதந்திர அரசுகளும் இணைந்து (Union) செயற்படலாம் என்ற ஸ்லாவியக் குடியரசின் ஆலோசனையையும் செக் குடியரசு ஏற்றுக் கொள்ளவில்லை. இந்நிலையில் இவ்வருடம் புரட்டாதி மாத முடிவிற்குள், பிராரிஸ்லாவா (Bratislava) என்பதைத் தலைநகராகக் கொண்டு, ஸ்லோவாக்கியா எனும் புதிய நாடு உருவாக உள்ளது.



பொஸ்னியாவில் சேபியத் தாக்குதலுக்குப் பலியான பெண்

முன்னைய யூகோஸ்லாவியாவில் தொடர்ந்து சண்டை நடை பெற்று வருகின்றது. சுதந்திரப் பிரகடனம் செய்த பொஸ்னியா -கெஸிகோவினாவில், சண்டையை நிறுத்த ஐ. நா. சபையும், ஐரோப்பிய சமூகமும் எடுத்த முயற்சிகள் தோல்வியையே தழுவி வருகின்றன. ஐரோப்பிய சமூகமும், ஐ. நா. சபையும், சேபியா, மொன்றிநிகரோ (புதிய யூகோஸ்லாவியா) ஆகிய குடியரசுகள் மீது விதித்த பொருளாதாரத் தடையும் பெரும் பயனை அளித்ததாகத் தெரியவில்லை. ஐ. நா. - சபையின் 1500 பேர் அடங்கிய சமாதானப்படை, பொஸ்னியாவில் சமாதானத்தை ஏற்படுத்த (Peace Making) முடியாத காரணத்தினால், சமாதானத்தைப் பேணவும் (Peace Keeping) முடியவில்லை. ஐ. நா. சபையின் மூலம் யூகோஸ்லாவியாவில் பொருளாதாரத் தடையைக் கொண்டு வருவதில் முன்னின்ற ஐக்கிய அமெரிக்கா, மனிதாபிமான (Humanitarian) நோக்கம், பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணத்தை அனுப்பும் நோக்கம் என்ற ரீதியில் தனது படையினை அனுப்புவது பற்றி ஆலோசித்து வருகின்றது. ஐரோப்பாவின் கொல்லைப்புறமும் 1 ஆம் உலகப் போருக்குக் காரணமுமான பால்கன் பகுதியில் நடைபெறும் இச்சண்டை தொடர்ந்தால், ஐரோப்பிய ஸ்திரத் தன்மையே சீர்குலைந்து விடும் என்று மேற்குலகம் அஞ்சுகின்றது. முன்னைய யூகோஸ்லாவியாவில் இருந்து உருவான புதிய நாடுகளிலிருந்து

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஏராளமான பகுதிகளைக் கைப் பற்றி, பரந்த சேபிய நாட்டை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட் டுள்ள சேபியாவும், அதன் தலைவர் ஸ்லோபோடன் மிலோ சவிக்கும் ஐக்கிய அமெரிக்காவின் படைகளை எதிர் கொள்வதற்கான சூழ்நிலையைத் தொடர்ந்து ஏற்ப டுத்துவார்களா என்பதே கேள்விக் குறியாக உள்ளது. பொருளாதாரத் தடையுடன் கூடிய, ராணுவப் படையெடுப்புத் தொடர்பான மிரட் டல், சேபியாவை அடிபணிய வைத்துவிடும் என்று நம்பப் படு கின்றது. ஆயினும், சேபியா, ஏனைய புதிய நாடுகளிலிருந்து கைப்பற்றிய பகுதிகளை, மீண்டும் அப்புதிய நாடுகளிடம் கையளிக் குமாறு மேற்குலகம் வலியுறுத்துமா அல்லது இராணுவ பலம் மூலம் சேபியா கைப்பற்றியதை மேற்கு லகம் அங்கீகரிக்குமா என்பதும் தெளிவாக இல்லை. மேற்குலகி லிருந்து தூர உள்ள எமது தீவில், பெரும்பான்மைத் தேசிய இனத் தின் மேலாதிக்கத்திற்கு ஆதர வாகவா? அல்லது சிறுபான்மை தமிழ்த் தேசிய இனத்தின் நியா யமான அபிலாஷைகளுக்கு ஆத ரவாகவா மேற்குலகம் செயற்படும் என்பதும் தெளிவாக இல்லை. யூகோஸ்லாவிய உதாரணத்தின் படி பார்த்தால், தமிழ் மக்களின் நியாயமான, சுயநிர்ணய உரி மைக்கு ஆதரவாகவே மேற்குலகம் செயற்பட வேண்டும். தற்போதய உலக நிலைமையில், ஐக்கிய அமெரிக்காவின் ஆணையிலேயே சர்வதேச அரசியல் நகர்கிறது என்பதும், யூகோஸ்லாவிய பிரச் சனை தரும் பாடமாகும்.

இந்தோனேசியாவின் ஆதி பத்தியத்திற்கு உட்பட்டிருக்கும் சிறு தீவான கிழக்குத் தீமோரிலி ருந்து இந்தோனேசியப் படைகள் வெளியேற வேண்டும் என்றும், அத்தீவு மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில், அம் மக்களின் சுதந்திரம் குறித்து சர் வஜன வாக்கெடுப்பு நடைபெற வேண்டும் எனவும், ஐக்கிய அமெ ரிக்கா வலியுறுத்தியுள்ளதாக வந்த செய்தியும் நம்பிக்கை அளிப்பதாக உள்ளது. ■

# சூழலைப் பாதுகாக்க உலகின் உச்சி மாநாடு.



சூழலை மாசு படுத்தாது மின்சாரத்தை உற்பத்தி செய்யும் காற்றாடிகள்.

மாசடைந்து வரும் பூமியின் வழி மண்டலம் தோற்றுவிக்க இருக்கும் அழிவிலிருந்து மனிதனைப் பாதுகாக்க உலகில் உள்ள நாடுக ளின் சுமார் 120 நாடுகள், உலகின் சுவாசப்பை எனக் கருதப்படும் அமேசன் காடுகள் நிறைந்த பிரேசில் நாட்டின் தலைநகரான றியோ டி ஜெனரோவில் ஒன்று கூடினர்.

சூழலை மாசுபடுத்தும் இரசாயனப் பொருட்களை தடை செய்வது அல்லது அவற்றை துப்பரவு செய்வதற்கான வழி முறைகளை வகுப்பது என்ற வகையில் இயற்கையைப் பாதுகாப்பதே அடிப்படை நோக்கமாக இருந்தது. ஆனால் இவை எவ்வளவு தூரம் நிறைவேற்றப்பட்டன என்பதை கணிப்பீடு செய்தால், அது பெரிய வெற்றியாக அமையவில்லை என்று தெரிகிறது.

உலக நாடுகளின் இரசாயன உற்பத்திச் சாலைகளில் இருந்து வளிமண்டலத்திற்கு வெளியேறும் இரசாயன கழிவுகளை துப்பரவு செய்வதற்கு ஏராளமான தொழில் நுட்ப பணச் செலவுகள் வேண்டியுள் ளது. ஆனால் இந்த துப்பரவு முறையைக் கையாள வறிய நாடுகளிடம் பணம் இல்லை. இதற்கு உதவி செய்வதற்கு பணக்கார நடுகள் எதிர் பார்த்த அளவு முன்வரவுமில்லை. இது இயற்கையை பாதுகாப்பதில் வறிய நாடுகளின் பங்களிப்பைக் குறைக்க வைக்கும்.

வளி மண்டலத்திற்கு ஒட்சிசனை வெளியிடும் தாவரங்கள், பெருங்காடுகள் ஆகியன அழிக்கப் படுவதை தடை செய்வதற்கும், இதற்கு மாற்றீடாக காடுகளை மீண்டும் வளர்ப்பதற்கும் கூட பெரிய அளவில் உதவி செய்வதற்கு பணக்கார நாடுகள் முன்வரவில்லை. மொத்தத்தில், பொருளாதார நோக்கத்திற்காக இயற்கையை அழித்தவர் கள், அழிவிலிருந்து இயற்கையை பாதுகாப்பதாக பூச்சாண்டி காட்டுகி றார்கள்.

இது ஒரு புறமிருக்க இயற்கையை பாதுகாப்பதெனக் கூறிக் கொண்டு, வறிய நாடுகளை இரசாயன உற்பத்திகளை குறைக்க வைத்து, மீண்டும் தம் பொருளாதார ஆக்கிரமிப்பிற்கு உட்படுத்த பணக்கார நாடுகள் முன்வரலாம்.

இவற்றிலிருந்து முற்றாகப் பாதுகாத்துக் கொள்ள எம்மை நாமே தயார் செய்து கொள்ள வேண்டும். உலகின் எதிர் கால அரசியலில் இயற்கைவியலுக்கும், இயற்கைவியலாளர்களுக்கும் முக்கிய இடமுண்டு.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


# தென் தமிழீழ நிகழ்வுகள்

ஒடுக்கு முறையாளர்கள் தோல்விகளைத் தழுவும் போதெல்லாம், வன்முறைகளை மக்கள் மீது கட்டவிழ்த்து விடுவார்கள். இவ்வகையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை அழித்துவிட எதிரி தன்னாலியன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டான். ஆனால் தமிழீழத் தேசத்தில் ஆயுதப் புரட்சி, அழுத்தங்களையும், தடைகளையும் வெற்றி கொண்டு முன்னேறியது. தனது முயற்சியில் எதிரி தோல்வியடைந்தான். ஆயுதப் புரட்சியை எதிர்கொள்ள முடியாது திணறினான். வன்முறைகளைப் பொது மக்களின் மீது கட்டவிழ்த்து விட்டான். இத் தமிழீழத் தேசம் முழுவதிலும் மக்கள்மீது கண்மூடித்தனமான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன. ஆனாலும் மோசமான முறையில் இழப்புக்களை எதிர் கொள்ளும் பிரதேசம் தென் தமிழீழமேயாகும்.

தென் தமிழீழம் எமது தேசத்தின் வளமிக்கதொரு பிராந்தியம் ஆகும். நிலவளம், நீர்வளம், மீன் வளம் நிறைந்த கடற்பிராந்தியம் - இயற்கைத்துறைமுகம், கனிப் பொருட்கள் வளங்கள் என வளங்களின் பட்டியல் நீண்டு செல்லும்.

பிரித்தானியர் இத்தீவை விட்டு வெளியேறிய 40 களிலேயே சிங்களப் பேரினவாதிகளின் கண்களில் அழகான எமது தமிழீழப் பிராந்தியம் பட்டது. வட -கிழக்கு பாரம்பரிய தாயகத்தில் சிங்களவர்கள் முதன் முதல் குடியேற்றப்பட்டது தென் தமிழீழத்திலேயாகும் .

ஆம் 40களில் இருந்து இன்றுவரை நீண்ட நான்கு தசாப்பதங்களுக்கு மேலாக எமது தேசத்தில் சிங்களவர்களின் குடியேற்றங்கள் வளர்ந்து வருகின்றன. அரசும், பிக்குகளும் கை கோர்த்து நின்று செயற்பட்டார்கள். சொந்த பிராந்தியத்திலேயே எமது மக்களின் இருப்பு கேள்விக்குறியானது. குடியேற்றவாசிகட்கு வேண்டிய உணவு, உடை, உறையுள் உட்பட அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டன. வட -கிழக்கு பகுதிகளுக்கான அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் சிங்கள மயமாக்கப்பட்ட பகுதிகளிலேயே மேற்கொள்ளப்பட்டன.

திகளை மீட்டு எடுப்பது சிங்களவரின் அக்கறை எனவும் கூறப்பட்டது. தென் தமிழீழத்தின் பௌத்த அழிபாடுகள் உள்ள பகுதிகள் புனிதப் பிரதேசங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டன. தலைமுறை தலைமுறையாக இங்கு வாழ்ந்து வந்த தமிழர்கள் வெளி



சொந்த வீட்டைஇழந்து விட்டார்கள்! குடும்பத்தில் அன்பானவர்களைப் பிரிந்து விட்டார்கள். ஆனாலும் இன்றும் இவர்கள் இந்த மண்ணை விட்டு ஓடவில்லை. தேசத்தின் விடிவிற்காக ஒன்றிணைந்து உழைக்கின்றார்கள். இழப்புகளால் சோர்ந்து விடவில்லை. உரம் பெற்று உறுதியோடு தேசத்தில் கால் பதித்து நிற்கின்றார்கள்.

இவை எல்லாவற்றிலும் மேலாக வரலாறு முழுமையாக திரிபுபடுத்தப்பட்டது. தமிழ்ப், பௌத்தர்கள் பற்றிய கருத்துக்கள் இருட்டடிப்புச் செய்யப்பட்டன. வடக்குக் கிழக்கின் சகல பௌத்த அழிபாடுகளும் சிங்களவர்கள் வாழ்ந்ததையே உறுதிப்படுத்துகின்றன என உறுதியாய் கூறப்பட்டது. இப்பிரதேசங்கள் சிங்கள்வர்களுக்கே சொந்தமானவை, இப்பகு

யேற்றப்பட்டனர். காலப் போக்கில் புனிதப் பிரதேசங்கள் சிங்களக் குடியிருப்புக்களாயின.

தமிழீழ தேசத்தில் ஆயுதப் புரட்சி உத்வேகமடைந்து செல்லச் செல்ல தனது தோல்விகளை சகிக்க முடியாத சிங்களப் பேரினவாத அரசு வன்முறைகளை மக்கள் மீது குறிப்பாக தென் தமிழீழத்தில் கட்டவிழ்த்து விட்டது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

1990 யூன் மாதம் திணிக்கப்பட்ட யுத்தத்தைத் தொடர்ந்து ஒட்டுமொத்தமாக தென் தமிழீழ மக்கள் அனைவருமே பாதிப்படைந்தார்கள். கிராமங்களை விட்டு வெளியேற்றப்பட்டார்கள். இன்று தமது சொந்த நிலத்திலே இவர்களால் பயிர் செய்யமுடியாதுள்ளது. கால் நடைகளை இழந்து விட்டார்கள். கடற்றொழில் செய்ய முடியாது வாழ்கின்றனர்.

இவை யாவற்றையும் விட சுற்றி வளைப்புக்கள், கைது செய்யப்படுதல், காணாமல் போவது, சித்திரவதை செய்யப்படுதல், கொலை செய்யப்படுதல் என துயரங்களும், வேதனைகளுமே நாளாந்தம் நிகழ்வுகளாகின்றன. வீடுகள் தோறும் இழப்புக்கள், வேதனைகள். தொழில் வாய்ப்புக்கள் கிடையாது. சுகாதார மருத்துவ வசதிகளோ ஏனைய அடிப்படை வசதிகளோ கிடையாது.

சிங்களவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் மாதம் மூன்று தடவை வழங்கப்பட, தமிழர்களுக்கு இரு மாதங்கட்கு ஒரு தடவையே வழங்கப்படுகின்றது. இதனைக்கூட வீட்டிற்குக் கொண்டு வந்து சேர்ப்பதே பெரும் பிரச்சனையாக உள்ளது. அண்மையில் மேற்படி நிவாரணத்தை தமிழ் மக்கள் பெற்று வந்த சமயம் முஸ்லீம் காடையர்களால் பறித்துச் செல்லப்பட்டன.

**தென் தமிழீழ மக்களுடனான நேரடிச் சந்திப்பிலிருந்து..**

அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட மக்கள் சிலரை நேரடியாகச் சந்தித்த போது அவர்களின் வேதனையான துயர் மிகுந்த வாழ்க்கை நிலைமைகளை அறிய முடிந்தது. ஏறத்தாழ 55 வயது மதிக்கத்தக்க தாயொருவர் எனக்குப் பின்வருமாறு மிகுந்த வேதனையுடன் குறிப்பிட்டார். "நாங்க இந்த வயசிலும் பொட்டோடு இருக்கிறோம். ஆனால் 20 வயதுகளிலேயே எங்கள் பெண்கள் வாழ்க்கைத் துணையை இழந்து விடுகின்றார்கள்." சந்தைக்கும் வயல் வேலைக்கும் கடற் தொழிலுக்கும் சென்ற தங்கள் துணைவர்கள் திரும்பி வராததைக் கண்டு தவித்துப்போன இளம் பெண்களினதும், மூன்று வயதுகூட நிறையாத, நிகழ்வுகளின் அர்த்தமே புரியாத அவர்களின் குழந்தைகளினதும் ஏக்கங்களை வார்த்தைகளில் வடித்துவிட முடியாது.

இளைஞர்களான உழைப்பாளர்களான தமது பிள்ளைகள் கொலை செய்யப்படுவதும், சுற்றிவளைப்புக்களில் கைது செய்யப்பட்டு காணாமல் போவதும் பெற்றோர் மத்தியில் சொல்ல முடியாத வேதனையையும், ஏக்கத்தையும் ஏற்படுத்துகின்றன. தனது வயோதிப நாட்களில் மகன் தன்னைப் பராமரிப்பான் என இருந்த தங்கள் மகன் சுட்டுக் கொல்லப்பட்டதால் பேரப்பிள்ளைகளை பராமரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளதை வேதனையுடன் எடுத்துக் கூறினார்.

இழப்புகளால் அவர்களைச் சோர்ந்து போக செய்ய முடியவில்லை. இந்த மண்ணில் அவர்கள் உறுதியோடு கால்பதித்து நிற்கின்றார்கள். தமது தேசத்தின் மீட்புக்காக, அடுத்த சந்ததியின் வாழ்விற்காக முன்னரைவிட தீவிரமாய் செயற்பட்டு வருகின்றார்கள். ■

# ஆயுதங்களாலேயே வாழ்கிறோம் அவற்றை ஒப்படைக்கக் கோராதீர்

## பிக்குகளிடம் ஒரு தாய் கருத்து

ஆயுதங்கள்தான் எமது உயிர்நாடி. ஆயுதங்கள் இருப்பதாலேயே நாம் அழிக்கப்படாமல் பாதுகாக்கப்படுகின்றோம். ஆயுதங்களைக் கீழே வைக்கும்படி கூறி எம்மை அழிக்க முயற்சிக்காதீர்கள். ஆயுதங்களைக் கீழே வைக்கும்படி கூறாமல் பிரச்சனைகளை தீர்க்க முயற்சி செய்யுங்கள்" இவ்வாறு யாழ்ப்பாணம் வந்திருந்த பௌத்த பிக்குகளின் நல்லெண்ணத் தூதுக்குழுவினரிடம் யாழ். பெரியகடையில் மரக்கறி விற்கும் வயோதிபத் தாய் ஒருவர் ஆவேசத்துடன் வேண்டுகோள் விடுத்தார்.

பௌத்த பிக்குகளின் தூதுக் குழுவினர்நே ற்று முற்பகல் யாழ். பெரியகடைப் பகுதிக்குச் சென்றபோது அங்கு மரக்கறி விற்பனை செய்துகொண்டிருந்த மேற்படி தாய் பிக்கு குழுவினரை வரவேற்றதுடன் இப்பகுதிகளில் வாழும் மக்கள் கடந்த காலத்தில் அரசபடைகள் மேற்கொண்ட தாக்குதல்கள் காரணமாக எதிர்கொண்ட கஷ்டங்களை எடுத்துக் கூறினார். பல்வேறு சமயங்களில் தமிழர்கள் கொல்லப்படுவது பற்றிக் கூறும்போது ஆவேசமடைந்த நிலையில் அபிநயம் செய்து நிலைமைகளை விளக்கினார். எங்களை அழிப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது. இதை நிறுத்தி "எங்களை நிம்மதியாக எங்கள் சொந்த மண்ணில் வாழவிடுங்கள்" என்று உணர்ச்சி ததும்ப உரத்த குரலில் கூறினார். இறுதியில் மேற்படி வேண்டுகோளை விடுத்தார். இத்தாயின் வேண்டுதல்களை பிரதம பௌத்த பிக்கு மிகவும் ஆர்வத்துடன் கணிசமான நேரம் நின்று செவிமடுத்தார்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# எல்லைக் கிராம பாதுகாப்புப் படை

இழப்பதற்கு இனி எதுவுமில்லை என்ற நிலையில் உள்ளன மணலாறு எல்லைக் கிராமங்கள். இம் மக்களின் நிலையும் அதுதான். ஆனால், இழப்புக்களை நிரந்தரமாக்க அவர்கள் தயாராக இல்லை. தாம் இழந்த மண்ணை, இழந்த பொருட்களை மீட்கவேண்டும் என்பதே அவர்களின் கொள்கை. இது இன்று அவர்களிடம் காணப்படும் உறுதி. எண்பதுகளின் ஆரம்பத்தில் பயிற்சியின்றி ஆயுதமேந்தி வீரத்துடன் செயல்ப்பட்ட மக்கள், தொண்ணூறின் ஆரம்பத்தில் பயிற்சியின் அவசியத்தை உணர்ந்து, தேவை கருதி பயிற்சி பெறத் தயாரானார்கள். இவர்களின் அவசியத்தின், தேவையின் அடிப்படையில் வேட்டைத்துப்பாக்கியுடன் பயிற்சிபெற விடுதலைப் புலிகள் ஊன்றுகோலாய் இருந்தனர்.

பயிற்சியின் ஆரம்பத்தில் மணலாறு மக்களின் மனவுறுதி பரீட்சிக்கப்பட்டது. வேட்டைத் துப்பாக்கிகளோடு களம் புகுந்தனர்.

1991 வைகாசித். திங்களோடு இவர்கள் பயிற்சி முடிந்து ஓராண்டு நிறைவானது. 1992 இல் இவர்களின் பயிற்சி 2 வது ஆண்டை நோக்கி நகர்கின்றது. இந்த இரு ஆண்டுகளில் இவர்கள் பல படிப்பினைகளைப் பெற்றுள்ளார்கள். ஆயுதங்களைப் பயன்படுத்துவதில் படிப்படியான வளர்ச்சியையும், அனுபவத்தையும் பெற்றுக் கொண்டிருக்கின்றனர்.

தேவை, அவசியம் கருதி வேட்டைத் துப்பாக்கியோடு களம் புகுந்தவர்கள் துணைப்படையெனப் பெயர் தாங்கினர். இந்த நிலையில் எல்லைக் கிராம மக்கள் அனைவரும் படையிலே இணையத் தொடங்கினர். வயது பேதமின்றி எழுபது வயது நிரம்பிய வயோதிபர்களும் துப்பாக்கி தாங்கி நின்றனர். ■

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**கர்நாடக அரசே! காவேரி நீரை,**
**தமிழகத்திற்கு திறந்தவிடு;**
**இல்லையேல் போர்வெடிக்கும்.**

**மத்திய அரசே!**
**சிறீலங்கா அபகரித்துவிட்ட**
**கச்சதீவை மீட்டுக்கொடு.**

# தமிழகம்

## ஒரு குறும் பார்வை

**சடையர்**

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா, தமிழக மக்களை உசுப்பிவிட்டு உறங்கவைக்க முன்வைத்த உணர்ச்சிக் கோஷங்களை இன்று கேட்கமுடிவதில்லை. அவை விடுதலைப் புலிகளின் தடைக்காக, மத்திய அரசிடம் பணயப் பொருட்களாக் கப்பட்டுள்ளன.

ராஜீவ் கொலையாளிகள் என்று ஆரம்பித்து, தடைசெய்ய ஆதாரம் போதாது எனத் தயங்கி, இந்தியாவின் ஒருமைப்பாட்டிற்கு ஊறுவிளைவிக்கும் சட்டவிரோத அமைப்பாகத் தீர்மானித்து இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் தடைசெய்யப்பட்டுள்ளது.

இந்தத் தடை உத்தரவு, விடுதலைப் புலிகளை எந்த விதத்தில் பாதித்துள்ளது அல்லது பாதிக்கும் என்ற ஆய்வுகள் அனுமானங்கள் ஒரு புறம் இருக்க, இந்தத் தடை உத்தரவால், தமிழகத்தில் ஏற்பட்டுவரும் வலுவான மாற்றங்கள் ஆட்சியாளர்களை பெரும் சங்கடத்தில் ஆழ்த்தியிருப்பது கண்கூடானது.

விடுதலைப் புலிகளுக்கு உதவிசெய்பவர்கள், தொடர்பு வைத்திருப்போர், ஆதரவு தருவோர், அவர்களுக்காக பிரச்சாரம் செய்வோர் கடுமையான சட்டங்களின் மூலம் தண்டிக்கப்படுவார்கள் என ஜெயலலிதா அரசு மிரட்டிய போதும், இன்று நிலைமை வேகமாக, சவால்களாக தலைநிமிர்ந்துள்ளது.

விடுதலைப் புலிகளை தடை செய்வதன் மூலம் தனது அரசியல் எதிரிகளை பழிவாங்கல், வேரோடி விரிகின்ற தமிழின உணர்வை அழித்தல், தமிழக மக்கள் மத்தியில் தோன்றிவரும் அரசியல் விழிப்புணர்வை இல்லாதொழித்தல் என்ற அடிப்படையில் ஜெயலலிதா வகுத்த திட்டத்துடன், இந்தியாவின் பிராந்திய நலன், தேச ஒருமைப்பாடு, இந்தியப் படையை வெற்றிகொண்டதால் ஏற்பட்ட பழிவாங்கும் உணர்வு ஆகிய விடயங்களால் மத்திய அரசு உடன்பட்டுப் போனது. இந்தக் காரணங்களுடன், அரசியல் பேரங்களின் விளைவாக விடுதலைப் புலிகள் அமைப்பு சட்டவிரோத அமைப்பாக அறிவிக்கப் பட்டது.

மத்திய, மாநில அரசுகளின் வஞ்சகத் திட்டங்கள் தமிழக மக்களால் புரிந்து கொள்ளப்படுவதுடன், ஏனைய மக்களுக்கும் புரியவைக்கப்படுகின்றன. தமிழின உணர்வு, இனப்பற்று, இனமானம் என்ற தளங்களில், அறிஞர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், கல்விமான்கள், பொதுப்பணியாளர்கள், அரசியல் வாதிகள் என்று ஒரு பரந்துபட்ட வெகுசனத் திரள்வொன்று தமிழகத்தில் தோன்றி வருகின்றது. விடுதலைப் புலிகள் மீது போர்தொடுப்பதென்பது முழுத் தமிழ்ச் சமூகத்தின் மீதான போரென கண்டித்துவருகின்றனர். விடுதலைப் புலிகளுக்கான தமது ஆதரவு தொடர்ந்து இருக்கும் என வெளியரங்கமாகவே அறிவித்துவருகின்றனர். எதிர்ப்படும் சவால்களை சேர்ந்து முறியடிப்போம் என எச்சரிக்கையும் விடுக்கின்றனர். மாநாடுகள் கூட்டுகின்றார்கள். எதிர்ப்பு நடவடிக்கைகளில் இறங்குகின்றார்கள். பிரச்சாரப் பயணங்கள் செய்கின்றார்கள். இத்தனைக்கும் தமிழக அரசோ மத்திய அரசோ எதுவித நடவடிக்கையிலும் இறங்காமல் நழுவிவருகின்றது. எடுக்கப்படும் நடவடிக்கைகளின் மோசமான பின்விளைவுகள் குறித்து ஜெயலலிதா அரசு அச்சம் கொண்டுள்ளது என்பது இதிலிருந்து தெரியவருகின்றது.

விடுதலைப் புலிகள்மீதான தடை உத்தரவிற்குப்பின், தமிழகத்தில், வெகுஜனப் போராட்டங்கள் வலுப்பெற்றுவருகின்ற அதே வேளை, தீவிரவாத தலைமறைவு நடவடிக்கைகளும் முளைவிட ஆரம்பித்துள்ளன. தனித் தமிழ் நாட்டைக்கோரும் அமைப்புக்கள், ஆட்சியாளர்கள் மீதான தமது எதிர்ப்புணர்வை வெளிப்படுத்தி வருகின்றன. அரசுடமைகள் மீது குண்டுத் தாக்குதல்களை இவ் அமைப்புகள் நடத்தியுள்ளன.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

"மதில்மேல் பூனை" நிலையில் இருக்கும், தமிழகத்தின், முக்கிய அரசியல் கட்சிகளில் மாற்றங்கள் தோன்ற ஆரம்பித்துள் ளன. விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களுக்கும், நடுநிலை வாதிகளுக்கும் இடையே தோன்றும் முரண்பாடுகள் கட்சியை உடைத்துவிடும் தன்மைக்கே இட்டுச் செல்வதாகவும் அவதானிக்கப் படுகின்றது. சிறிய சிறிய அமைப்புக்கள், கட்சிகள் என்பன துணிந்து ஆட்சியாளர்களுக்கு சவாலாக நிமிர்ந்து நிற்க, பெருந் தொகைத் தொண்டர்களைக் கொண்ட கட்சிகள், அமைப்புக்கள் ஆட்சியாளர்களின் சட்டத்திற்கு பயந்து நடுங்குவதும், பதவி நோக்கில் மௌனம் சாதிப்பதும், காலத்தின் நாடி பிடித்துப் பார்த்து அரசியல் சிந்துவிளையாட களம் பார்த்துநிற்பதும் கேவலமாக விமர்சிக்கப்படுகின்றது. பெரும் கட்சிகளில், இளைஞர் மட்டங்களில், ஏற்பட்டுவரும் விடுதலைப் புலி ஆதரவு அலை கட்சிகளின் கொள்கைகளை, நிலைப்பாட்டை மாற்றியமைக்கும் தன்மைகளைப் பெற்றுவருவதும் அவதானிக்கப்படுகின்றது.

இன்று, பத்திரிகை உலகம் ஜெயலலிதா அரசின்மீது போர் தொடுத்துள்ளது. ஜெயலலிதா அரசின், ஜனநாயக விரோதச் செயற்பாடுகள் கட்டுமீறிப் போவதற்கெதிராக பத்திரிகைகள் குரலெழுப்பிவருகின்றன. பதிலுக்கு, பத்திரிகையாளர்களை, ஜெயலலிதா வெளிப்படையாக சட்டநடவடிக்கை என்ற பேரிலும், மறைமுகமாக காடைத் தனங்களை ஏவியும் தனது இஷ்டம்போல் அடக்க முனைந்துள்ளார். பத்திரிகை உலகிற்கும், ஜெயலலிதா அரசிற்கும் இடையே உறவு விரிசல்கள் விரிந்தே செல்கின்றன.

ஜெயலலிதா அரசு இன்று எதிர் நோக்கும் பிரச்சனைகள் பல. ஒவ்வொன்றும் பலமானவை, கூர்மையானவை. அவற்றை வெற்றிகொள்வது என்பதை விடுத்து, அவற்றில் இருந்து தப்பிப்பது எப்படி என்பதே முதல்வர் ஜெயலலிதா முன்னுள்ள வலிந்த கேள்வியாகும். ■

# அந்நிய மண்ணில் அகதி வாழ்க்கை தொடரக்கூடாது என்பதற்காக படிப்பினைகளை பதிவு செய்வோம்.

ஈழத் தமிழர்களின் இன்றைய காலகட்ட நெருக்கடியில் அகதிகளாக இடம் பெயர்ந்து வாழும் ஒரு சூழல் உள்ளது. இவ்வகையில் உள்நாட்டு அகதிகள், வெளிநாட்டு அகதிகள் என எமது பட்டியல் அகன்றதாகும். இதில் ஐரோப்பிய நாடுகளை நோக்கி ஓடும் வெளிநாட்டு அகதிகளின் பட்டியல் அனுதாபத்துடன் பார்க்கக் கூடியதொன்றல்ல. சூழலைப் பயன்படுத்தி தப்பி ஓடியவர்களே இதில் அநேகமானோராவார். எப்படி எனினும் அவர்களைப் பிரச்சினையின் அடித்தளத்தில் வைத்து தமிழர்கள் என்ற வகையில் அனுதாபத்துடன் நோக்குதல் அவசியமான தாகும். எமக்கென ஒரு அரசு இல்லாதவரை நாம் எந்த மண்ணிலும் நிம்மதியுடனோ, கௌரவத்துடனோ வாழ முடியாது. அப்படியானால் ஒரு அரசைநிர்மாணிப்பதற்கான போராட்டப் பாதையில் ஒரு வேதனை நிறைந்த அனுபவமாகவே இதனை நாம் பார்க்க வேண்டி உள்ளது.

இவ்வாறு அகதிகளாகப் போன எம் மக்களை பல அந்நிய நாட்டோரும் கௌரவமற்று நடாத்துவதை சகிக்க முடியாதுள்ளது. அந்நாட்டுச் சூழலில் அவர்கள் படும் இன்னல்களை நாம் வேதனையுடன் புரிந்து கொள்ள வேண்டும். இத்துயர்களையும், வேதனைகளையும் ஒரு வரலாற்றுப் பதிவாக்க வேண்டியது அவசியமாகும். தாம் வாழும் நாடுகளில் எதிர் நோக்கும் நெருக்கடிகளை கலைப்படைப்புகளாக, அறிவியல் கட்டுரைகளாக வெளியிட வேண்டும். அந்நாடுகளில் கடும் குளிரிலும், இயந்திரக் காடுகளின் மத்தியிலும், சன நெரிசல்களினுள்ளும் முகமற்ற மனிதர்களாக எம்மவர்கள் படும் இன்னல்களை இங்கிருந்து எம்மால் கலைப்படைப்பாக்க முடியாது.

அவர்களின் முகங்களில் வெள்ளையர்கள் ஏற்படுத்தும் அவமானக் குறிகளை எம்மால் புரிந்துகொள்ள முடியாது. எனவே அவற்றை அவர்களே வடிக்கவேண்டும். இது எமது வரலாற்றில் ஓர் அங்கமாகும்.

ஆனால் உண்மையில் இங்கு ஒரு விசித்திரத்தைக் காண்கின்றோம். அவர்கள் தாம் புகுந்துள்ள நாடுகளில் தாம் படும் இன்னல்களைப் படைப்புகளாக்காமல் மாறாக அந்நிய மண்ணில் இருந்து கொண்டு ஈழமண்ணைப் பற்றி கவிதை எழுதும் விந்தையே அது. எமது மண்ணின் இன்றைய வாழ்க்கைத் துயர்களில் பங்கெடுக்காமல் எப்படி அவர்களால் வெளிக் கொணர முடியும்? பல சந்தர்ப்பங்களில் வெளிநாடுகளில் உள்ளோரின் படைப்புகள் எல்லாம் ஈழ மண்ணிற்கு உபதேசம் செய்யும் பாணியிலேயே உள்ளன. ஆனால் உண்மையில் அவர்கள் செய்யவேண்டியது புகுந்த மண்ணில் பெற்ற அனுபவங்களையும், அவலங்களையும் வெளிப்படுத்துவதேயாகும். அதற்கு முதன்மை கொடுக்கவேண்டும்.

அதற்காக எமது போராட்ட நியாயங்களை எழுதக் கூடாது என்பதல்ல. மொத்தத்தில் வெளிநாட்டு அகதிவாழ்க்கையின் இன்னல்களையும், அவலங்களையும், வாழ்க்கை முறைகளையும் கலைப்படைப்புக்கள், அறிவியல் கட்டுரைகள் வாயிலாக வெளிக்கொண்டு வர வேண்டும். அவற்றைப் படிக்கும் வெளிநாட்டவர்கள் அவர்களைப் புரிந்துகொள்ளப் புதிய சந்தர்ப்பம் ஏற்படலாம். அதனைவிட முக்கியமாக அந்நிய வாழ்வின் அனைத்து விடயங்களும் ஆவணப்படுத்தப்படும் வரலாறாய்ப் பேண வாய்ப்பு ஏற்படுத்தப்படும்.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# எங்கள் சின்னவன்



இந்தச் சின்னவன்
திக்கும் திரியும்
தீக் குஞ்சு!
புழுதித் தரையில்
ஓடி விளையாடி,
வெய்யில் சுட்டு
இவன் மேனி கறுத்தது.
பெரு வெளிக் காற்றில்
குளித்துக் களைத்து
வெறும் தரையில் விழுந்து
கிடந்து, தூங்குகின்றான்
எங்கள் சின்னவன்.
இவன் எங்களின்
மண்ணில் பிறந்தவன்.
அன்னை மண்ணில் கிடந்து
புரண்டு தோய்ந்தெழும்
இவனின் பூவிதழ் பாதம்
புயல் எதிர் நடக்கும்.
பூமிப் பந்தின் திசையெல்லாம்
மானுடம் செழிக்கும் !

# எங்கள் நாடு

எங்கள் ஈழத் தமிழகம்
எங்கள் நாடு என்குவோம்
எங்கள் ஈழத் தமிழகம்
எங்கள் வீடு என்குவோம்

நாடும் வீடும் நமக்கிது
நாங்கள் வாழும் நிலமிது
காலம் காலமாய் எம்மைக்
காக்கும் தெய்வத் தாயிது

பாட்டி வாழ்ந்த குடிலிது
பாட்டன் நடந்த தெருவிது
கூட்டமாக கூடி நாம்
கலைகள் வளர்த்த நாடிது

அன்பை ஊட்டும் எமதகம்
அறிவை ஏற்றும் தாயகம்
பண்பு வீரம் கொண்டெமை
காக்கும் ஈழத் தமிழகம்

மு. பொன்னம்பலம் அவர்களின் "முற்றத் துப்பூக்கள்" (சிறுவர்களுக்கான பாடல்கள் அடங்கிய நூல்) நூலிலிருந்து.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

**வாசகர் கடிதப் பகுதி**



# அக்கினிப்பூக்கள்

**அன்புடன் எரிமலைக்கு,**

வைகாசி மாத இதழ் பார்த்தேன். பல தடவைகள், அனு அனுவாக ரசித்துப் படித்தேன்; அற்புதம்.

பத்திரிகையின் ஆக்கக்கோர்ப்பும், வர்ணமும், கவிதைகளும், கதைகளும், கட்டுரைகளும்.... என்னத்தைச் சொல்ல.... திறமை.

குறிப்பாக கவிதைக் களத்தில் நான்கு கவிதைகளுமே அற்புதம். ஜேர்மனியில் இருந்து வந்த ஜெகதீஸ்வரி ராஜரட்னம் அவர்களின் பெண்புலி என்னை நோக வைத்துவிட்டது.

தமிழ் எரிமலையே!

நீ பல நூறு ஆண்டு வளமுடன் வாழ இந்தக் கிழவனின் ஆசிகள்.

உன்
அன்பு அண்ணன்
ரெத்தினம் தர்மானந்தராஜா
LONDON

**அன்புள்ள ஆசிரியர் குழுவுக்கு!**

இன்று ஐரோப்பிய நாடுகளில் எத்தனையோ பத்திரிகைகள் வெளியாகிக்கொண்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றும் ஏதோ ஒரு வகையில் வியாபார நோக்குடனும், தனிநபர் குழுக்களின் விரோத வெளிப்பாடுகளாகவுமே வெளிவருகின்றன. ஆனால் மாதந்தோறும் புதுமையான முறையில் நேர்த்தியாகவும் காலம் தவறாமலும் வெளிவரும் "எரிமலை", எமதுமக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிப்பதாகவும், தமிழீழப்போராட்டத்தின்பால் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்களை ஒருங்கிணைக்கும் வகையிலும் அமைவதானது, ஒரு பத்திரிகைக்குரிய பாரிய பொறுப்பையும், கடமைகளையும் ஆற்றிவருகின்றது என்பதற்கு சான்றாகும்.

இன்னும் வளர என்றும் என் நல்லாதரவு.

நன்றி.

T. அசம்ரா
St. DENIS, France.

## பேனா தூக்கி......



மனது இனித்தது
காதல் கவிதைகள்
கட்டுக் கணக்கில்
எழுதி வைத்தேன்,

பாராட்டுக் கிடைத்தது,
புரட்சிக் கோஷங்களை
பொழுதெல்லாம் எழுதினேன்.

சனங்களின்
சங்கடங்களைக்
கவிதையாகச் சொன்னேன்,
கைதட்டல்கள் தான் !

எங்கள் தேசமோ
எரிந்து கொண்டிருக்கிறது.
விடுதலை வேண்டி எழுதுவதும்

வெண்புறா
பறக்கப் பாடுவதுமே
இப்போ
வேலையெனக் கொண்டேன்.

**ஆக்கம் - அம்சன்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## போராட்டம்



மன்னார் பண்டிவிரிச்சான் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைச் சூழலில் பலதடவை ஸ்ரீலங்கா வான்படை விமானங்கள் குண்டுவீசித் தாக்கியுள்ளன. இவ்வகையான தாக்குதல்களையடுத்து கல்வித்திணைக்கள நிர்வாகிகள் பாடசாலையை வேறிடத்திற்கு இடம் மாற்ற வேண்டுமென்று விரும்பினர். ஆனால் மாணவர்களும் பெற்றோரும் இடம் மாறுவதால் எதிரியின் குண்டுவீச்சை தடுக்கமுடியாது என்றும் தமது பாடசாலை தம் மத்தியிலேயே இருக்க வேண்டும், இயங்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தனர்.

இப்போது, பாடசாலையில் பெற்றோர்களால் பதுங்குகுழிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், பாடசாலை நடைபெறும் நேரங்களில் குண்டுவீச்சு விமானங்களின் வருகையை அவதானித்து எச்சரிக்கை செய்வதற்காக சுழற்சி முறையில் பெற்றோர் காவல் காத்தும் நிற்கின்றனர்.

பெற்றோரின் அயராத முயற்சியால் இப்பாடசாலை அதே இடத்தில் தொடர்ந்து இயங்குகின்றது.

## கலைஞர்களை கௌரவிக்கும் விழா



கலை இலக்கிய போரில் எம்மண்ணின் கலைஞர்கள் ஆற்றிவரும் சேவை மகத்தானது. "சந்தனக்காடு" எனும் நாடகக் கலைஞர்களை கௌரவிக்கும் வகையில் யாழ். இந்துக் கல்லூரியில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத் தின் தமிழீழப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரையின் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. கலைஞர்களுக்கான விருதுகளை, விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு செயலதிபர் திரு. யோகரத்தினம் யோகி அவர்களும், மகளிர் படைப்பிரிவுப் பொறுப்பாளர் செல்வி. ஜெயந்தி அவர்களும் வழங்கிக் கௌரவித்தனர். பொன். கணேசமூர்த்தியின் "சந்தனக்காடு" நாடகம் பற்றிய கருத்துரையை கலைப் பேரரசு ஏ. ரீ. பொன்னுத்துரை வழங்கினார்.

## சீமேந்துக்குப் பதில் சுண்ணாம்பு



கட்டுமான வேலைகளுக்கு சீமேந்து பெறமுடியாத நிலையில் சீமேந்துக்குப் பதிலாக கற்சுண்ணாம்பை பயன்படுத்தும் முறையை தமிழீழ ஆய்வு நிறுவனத்தின் துணை அமைப்பான "தேசநிர்மாணிகள்" அறிமுகப்படுத்தியுள்ளது. இக்கற்சுண்ணாம்பானது சீமேந்தைப் போல் உபயோகிக்கமுடியாது. கட்டிய பின் காய்வதற்கு கூடிய நேரம் தேவை. சீமேந்து போன்று பலத்தை எதிர்பார்க்க முடியாது. ஆனால் நாட்கள் கூடக்கூட இதன் வலிமையும் கூடும் என்று அதன் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## இலங்கை அரசின் இன அழிப்பிற்கான செலவீடு



யுத்தம் ஆரம்பித்த பின்னர் வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு இதுவரை ஐம்பத்தியொரு கோடியே அறுபது இலட்சம் ரூபா பெறுமதியான அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. இதேவேளை பாதுகாப்பு நிதிக்காக அனுப்பப்பட்ட தொகை நாளொன்றிற்கு நாலு கோடி ரூபா ஆகும். இந்த விகிதாசாரப்படி வடக்குக் கிழக்கில் ஒரு நபருக்கு அத்தியாவசியப் பொருட்களுக்கு நாளொன்றிற்கு நாற்பது சதம் செலவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் பாதுகாப்புச் செலவுக்கு ஒரு நபருக்கு நாளொன்றிற்கு பதினேழு ரூபா நாற்பது சதம் செலவு செய்யப்படுகின்றது.

## சிறுவர் இலக்கியம்

சிறுவர்களும் பாடக்கூடியவாறு சிறந்த படைப்புக்கள் உருவாகுகின்றன. முன்பெல்லாம் எமது சிறார்கள் "அம்மா நான் விளையாடப் போறன்" என்ற பாடல்களைப் பாடினார்கள். ஆனால் இன்று "இந்த மண் எங்களின் சொந்த மண் இதன் எல்லையை மீறி யார் வந்தவன்" என்று உணர்ச்சி பொங்க புரட்சிப் பாடல்களை பாடும் அளவிற்கு மாறிவிட்டனர். எங்கள் சிறார்களும் பாடக்கூடிய முறையில் சிறந்த பாடல்களை உருவாக்கிய கலைஞர்களை பாராட்டாமல் இருக்கமுடியாது.

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# மண்ணில் ஊறிய உணர்வுகள்

யதார்த்தன்

அந்த அன்னையர்கள், கல்லூரியில் மட்டும் எனக்கு ஆசிரியர்கள் அல்ல. நான் பங்காற்றும் இந்த விடுதலைப் போராட்டத்தில் கூட இவர்கள் எனக்கு ஆசான்களாகத் திகழ்கிறார்கள் என்பதை எண்ணும் போது, என் கற்பனா சக்திக்கும் மேலான ஒன்று என்னுள் குடிபுகுந்து, என் உணர்வுகட்கு மேலும் வலுவூட்டுகின்றதென்றால் அத்தாய்மார்கள் அப்படி வித்தியாசமாக என்னதான் செய்திருப்பார்கள் என்ற கேள்வி எமக்குள் எழலாம்.

ஆம்! கஷ்டத்தில்தான் உண்மையானவர்கள் இனங்காணப்படுவார்கள். அதற்கேற்ப எம்மண்ணின் ஒரு பகுதி எதிரியின் ஆக்கிரமிப்பு வலைக்குள் சிக்குண்டிருக்கையில், தமது உயிர் உடமைகளைத் துச்சமென மதித்து எமது விடுதலைப் போருக்கு பூரண பங்காற்றிய அந்த அன்னையரை நாம் எல்லோரும் அறிந்து கொண்டால், எமது உள்ளத்து உணர்வுகளில் சிறிதேனும் உந்துதல் உண்டாகும் என்ற நம்பிக்கையில் இப்பக்கங்களை என தாக்குகிறேன்.

■

அதிரும் அந்த அதிகாலைப்பொழுது, எமது செவிப்பறைகளை மட்டுமல்ல எமது மண்ணே பிளந்து போகும் அளவிற்கு குண்டு வீச்சு விமானங்களின் தாக்குதலோடு ஆரம்பிக்கப்பட்டதுதான் "வடமராட்சி விடுவிப்புத் தாக்குதல்". எம் மக்களைக் கதிகலங்க வைத்த மாபெரும் இன அழிப்பு இராணுவ நடவடிக்கை அது. இது தொடங்கியது 87 இல் தொழிலாளர் தினத்தைக் கடந்து 25 நாட்களின் பின் ஓர் அதிகாலை. அப்போது நாமோர் "கெரில்லா" அணி என்ற நிலையிலிருந்து சற்று முன்னேறி முகாம் வாசலில் வைத்தே இராணுவத்தினர் முகாமைவிட்டு வெளியேறாது, தடுத்து திருப்பியனுப்பும் புதிய யுக்தியைக் கைக்கொண்டிருந்த காலம். ஆனால் எமக்கு விடப்பட்ட சவாலோ பெரியது. எமது சக்திக்கு மிகமிக அப்பாற்பட்ட ஒரு சக்தியோடு மோத வேண்டிய, அதாவது நூற்றுக்கணக்கான போராளிகள், நூற்றுக்கும் குறைவான ஆயுதங்கள், இவற்றோடு ஒரு நாட்டின் அரைப் பங்கு இராணுவ பலத்தை (முழு அளவிலான விமானப்படைப் பலம், 75% ஆன கடற்படைப் பலம், 8,000 தரைப்படை இராணுவம்) எதிர்த்து மோத வேண்டிய இக்கட்டான நிலை. ஒரு கெரில்லா அணியின் நேரடியான மரபுவழி யுத்தம். பொருத்தமற்ற, யுத்த மரபுகளுக்கு முரணானதோர் யுத்தப் பிரகடனத்தை ஸ்ரீலங்கா அரசு எம்மீது பிரகடனம் செய்தது. ஒரு மரபுவழி யுத்தத்தை எதிர்கொள்ள வேண்டிய ஆயுதச் சமபலம் எம்மிடம் இல்லாத நிலையில் தற்பாதுகாப்பிற்காக சில நாட்கள் நேரடியாகப் போரிட்ட நாம் மீண்டும் ஓர் "கெரில்லா" அணியாக மாறி போர் புரிய வேண்டிய நெருக்கடியான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டோம். ஏனெனில் அப்பிரதேசம் முழுவதும் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டு சதுரங்கத் தந்திரோபாய முறைப்படி (இஸ்ரேலியர்கள் பாலஸ்தீனத்தில் கையாளும் போராளிகளின் நடமாட்டங்களை, செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் தந்திரோபாயம்) முழத்துக்கு முழம் முகாமிடப்பட்டிருந்தது. வீதியால் ஓர் ஆள் உருவம் அசைகின்றதென்றால் நெற்றி வெடி விழும் சூழ்நிலையில் தான், இவ் இராணுவ யுக்தி வியூகத்தை உடைத்தெறிய வேண்டிய தேவை எமக்கு ஏற்பட்டது. அதாவது போராளிகள் நகரவோ, அன்றி வேவு பார்க்கவோ முடியாத சூழ்நிலை. ஆனாலும் இராணுவத்தினரின் சதுரங்க வியூகத்தை உடைத்தேயாக வேண்டிய தேவை. அப்போதுதான் நான் படித்த பாடசாலையில் அமைந்திருந்த அந்த முகாமின் அருகே அமைந்திருந்த எனது ஆசிரியர்களின் வீடுகள் எம் நினைவுன்னுக் வந்தன. அப்பாடசாலையில் இராணுவ முகாம் அமைக்கப்பட்ட பின்னர் அருகே உள்ள பெண்கள் பகுதிக்கு இப்பாடசாலையின் வகுப்பறைகள் இடமாற்றப்பட்டிருந்தும், பாடசாலையின் உபகரணங்கள் எதுவும் புதிய இடத்திற்கு மாற்றப்படாமையும் எங்கள் சிந்தையில் எழுந்தன. ஆகையால் இவ் உபகரணங்கள் இடம் மாற்றுவதைக் காரணங்காட்டி முகாமிற்குள் சென்று முகாமை வேவு பார்க்க என் பள்ளி ஆசிரியர்களை நான் அணுகினேன். அன்றைய ஆபத்தான சூழ்நிலையில் எமது விடுதலைப் போராட்டம் ஓர் பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கும் சூழ்நிலையில் இரு ஆசிரியர்கள் உதவ முன்வந்தபோது அவர்கள் எமது பாதையையும், இந்த மண்ணையும் எவ்வளவு தூரம் நேசிக்கிறார்கள் என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. எமது ஆலோசனைகளின்படி உளவு

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பார்க்கும் பணியை செவ்வனே நிறைவேற்றிய இவர்கள், சுற்றத்தார் மத்தியில் தாக்குதல் பற்றிய வீண் சலசலப்புகள் ஏற்படக்கூடாது என்பதற்காக அவரவர் வீடுகளில் இருந்தவாறே எதிரியின் முகாமை தினசரி நன்கு நோட்டமிட்டு இராணுவத்தினரின் நடவடிக்கைகள் பற்றி எங்களிடம் தெரிவித்திருந்தார்கள். அவர்கள் தந்த தகவல்களின் பிரகாரம் இரவு 7.30 மணி, இராணுவத்தினர் உணவு அருந்தும் நேரம் எனவும் பின்னர் இரவு 8 மணிக்கு சிங்கள தொலைக்காட்சிச் செய்தியை பார்ப்பதில் பெருமளவு இராணுவத்தினர் கவனம் செலுத்துவார்கள் எனவும் இரவு 9 மணிக்குப் பின் அதிகளவு இராணுவத்தினர் முகாமைவிட்டு வெளியேறி மறுநாள் காலைவரை முகாமைச் சுற்றியுள்ள வீடுகளுக்கு தங்கச் சென்று விடுவார்கள் என்றும் கூறினர். ஆகவே இரவு 9 மணிக்கு முன் முகாமைத் தாக்கியாக வேண்டும் என்ற கட்டாயம் எமக்கு ஏற்பட்டது. இராணுவத்தினர் எல்லோரும் விழிப்பாக இருக்கும் போது நாம் நடாத்தத் திட்டமிட்ட முதலாவது இராணுவ முகாம் மீதான தாக்குதல். பொருத்தமற்ற நேரம்தான். ஆனாலும், அவர்களின் பலவீனம் சிங்கள செய்தி கேட்பதில் இருந்ததால் அதை நாங்கள் சாதகமாக்கி "கரும்புலி" கப்டன் மில்லரின் தன்னலமற்ற தியாகத் தாக்குதலால், அம்முகாமை நிர்மூலமாக்கினோம்.

என் தளச் சகா மில்லரின் நினைவு நாள் ஆடித் திங்களில் என்பதால், இவ்விதழில் நான் அவனோடு வாழ்ந்த காலத்து நினைவுகளை மீட்டல், காலத்தின் அவசியமாகின்றது. சாவுக்கே சவால் விட்ட அந்த வீரனின் விந்தையை இன்றும் பலர் பின்பற்றும் மனோபலம் பெற்றிருக்கிறார்கள். இவன் தந்தை ஓர் வங்கி முகாமையாளர். வசதியான குடும்பத்தில் வசதியான வாழ்க்கை வாழ்ந்த இவன் விடுதலைப் போராட்டத்தில் வாழ்ந்த எளிமையான வாழ்க்கையும், மற்றவர் மனம் நோகாமல் பழகும் பண்புகளும், தான் சிரிக்காமலே பாசறையில் தன்னைச் சுற்றியுள்ளோரை சிரிக்க வைக்கும் இலாவகமும், இராணுவத்தினருடனான மோதல்களின் போது துப்பாக்கியோடு ஒரு பம்பரம் போல் சுழன்று அநாயாசமாகச் சண்டையிடும் இவன் வேகமும், துப்பாக்கி வேட்டுகளுக்கு மத்தியில் மட்டுமல்ல, ஆகாய அரக்கர்களின் வானத் தாக்குதல்களுக்கு நடுவேயும் சிறிதும் கலங்காமல் வழி பிசகாமல் வாகனம் ஓட்டும் சாதுரியமும், இன்றும் எங்கள். கண்களுக்குள்ளே நிழலாடுகின்றதென்றால் கொண்டிருக்கும் ஓர் தோற்றத்தை கொடுக்கிறதென்றால் அவன் திறமையை சிறிது சிந்தித்துப் பாருங்களேன். அவனது வாகனம் கடைசியாக ஊர்ந்து கொண்டிருக்கும் தோற்றம் என்றும் எமது நினைவை விட்டு நீங்காது. எல்லாவற்றுக்கும் மேலாகச் சாவைக் கண்டு அஞ்சியோடும் மனிதருக்கு மத்தியில், தன் சாவிற்கு தானே போட்டி போட்டு தேர்வின்றிச் சாவைத் சந்திக்கும் மனோவலிமை அவனுக்கு உள்ளேயே வளர்ந்த ஒன்று. அது தலைவர் பிரபாகரனின் பாசறையில் பயின்றோரால் மட்டுமே சாதிக்கக் கூடியதுமாகும். இவன் வகுத்திட்ட இவ் வழிப்பாதையைத் தொடரும் பல போராளிகள் எமக்குள் இருக்கும் வரை எம்மை, எமது விடுதலையை யாரால் என்ன செய்துவிட முடியும்? எமது திட்டத்தின் பிரகாரம் மில்லரின் வெடிகுண்டு வாகனம் இராணுவ முகாமின் மிகப் பொருத்தமான இடத்தில் வெடித்துச் சிதறிய பின் ஒரு குழு சண்டையிட, மறு குழுவோ இடிந்த கட்டிடங்களுக்குள் மில்லரை சல்லடைபோட்டுத் தேடியது. நிஜமாக அப்போது அவன் சரித்திரம் படைத்துச் சங்கமமாகிவிட்டான் என ஊர்ஜிதப்படுத்த முடியாமல், எங்காவது ஒரு மூலையில் அவன் கிடைப்பான் என்ற நம்பிக்கையில், நப்பாசையில் சத்தமிட்டு, அவன் பெயரைக் காற்றிலே கலக்கவிட்டுத் தேடினோம், தேடுகிறோம். இன்றுவரை அவன் எமக்கு கிடைக்கவேயில்லை. அவன் உடலோ, அன்றி அவனின் உடலின் பாகங்களோ கிடைக்காத நிலையில் அவன் இடித்துச் சாய்த்த கட்டிடச் சிதறல்களுக்குள் சிக்குண்டிருந்த எதிரியிடமிருந்து மீட்ட ஞாபகச் சின்னங்களை ஏந்திச் சோகமாக எமது தாக்குதல் நிலைகளை நோக்கி திரும்பினோம். அப்போதும் அருகிலுள்ள எதிரி முகாம்களிலிருந்து வீசப்பட்ட சரமாரியான குண்டு வீச்சு ஒரு புறமும், ஆகாயப் படையினரின் தாக்குதல்கள் மறுபுறமும் நடந்து கொண்டேயிருந்தன. இவற்றுக்கு மத்தியில் தமக்கு ஏற்படவிருக்கும் உயிராபத்தைக்கூட பொருட்படுத்தாது யுத்த களத்தில் நின்றுகொண்டே எமக்கெல்லாம் எலுமிச்சை நீர் கரைத்துப் பரிமாறி எம்மை உற்சாகப்படுத்திய அவ் ஆசிரியர்களைப் போன்ற உள்ளங்களின் உணர்வுதான் இன்றும் எம்மை உறுதியாக இயங்க வைக்கிறது. எமது இத் தாக்குதல் முடிவடைந்து வெடிச் சத்தங்கள் ஓய்ந்த பின்னர் தத்தமது வீடுகளைப் பார்க்கச்சென்ற ஆசியர்களுக்கோ அங்கு காத்திருந்தது பேரதிர்ச்சிதான். முகாமிற்கு வெறும் இருபதே யார் தொலைவிலே இருந்த இருவர் வீடுகளும் இத்தாக்குதலின் போது முற்றாகச் சேதமடைந்திருந்தன. இவர்களும் இவர்தம் குடும்பங்களும் எம்மோடு எமது முகாம் திரும்ப வேண்டியிருந்த பரிதாப நிலையின் பின்பும், இவர்கள் இன்றும் விடுதலைப் போராளிகளோடுதான் வாழ்கிறார்கள் என்றால், இவர்கள் உள்ளங்களில் சங்கமித்திருக்கும் விடுதலை வேட்கை எத்தகையது என எண்ணிப் பார்க்கிறோம். உண்மைதான்; இவ்வளவிற்குப் பின்பும் எனது ஆசிரியர்தான் எமது இராணுவப் படைத்துறை வாத்தியக் குழுவின் அஸ்திவாரமாக திகழ்கிறார் என்றால் என்னுள் எழுகின்ற கேள்வி, புறநானூற்றுத் தாய்மாரால் தமிழீழ அன்னையருக்கு நிகராக நிற்க முடியுமா என்பதுதான்.

**போராட்டத்தில் நீங்கள் சந்திக்க நேர்ந்த மக்களின் உணர்வு நிறைந்த செயல்களை கதையாக எமக்கு எழுதி அனுப்புங்கள்.**

www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## போர் நடக்கையில் கிராமத்துப் பெண்களின் பணி.

நிலமும் நீரும் எல்லாருக்கும் சமமாகப் பகிர்ந்து அளிக்கப்பட்டால், நம்மிடம் சொந்த நிலம் இருந்தால், நாமும் உழுது விதைத்து நமது கோதுமையைக் கதிரடித்தால் அதுதான் நம்முடைய இன்பம், இதைவிட மேலான இன்பம் மனிதனுக்குத் தேவை இல்லை.

■

ஒவ்வொரு நாளும் இராணுவத்தின் அழைப்பின் பேரில் ஆட்கள் போனார்கள். பாக்கி இருந்தவர்கள் வேலை செய்தார்கள். வெயில் கொளுத்தும் பகலிலும் புழுக்கம் நிறைந்த வறண்ட இரவுகளிலும் அறுவடை வயலிலும் களத்திலும் சரக்கு வண்டிகளிலும் ஜனங்கள் ஓயாமல் உறங்காமல் உழைத்தார்கள்; பாடுபட்டார்கள். ஆண்களின் எண்ணிக்கை வர வரக் குறைந்து கொண்டே போனபடியால் வேலை மேலும் மேலும் அதிகமாகச் சுமந்து கொண்டு போயிற்று.

■

தல்கோனை, நானும் நீயும் எந்த நிலையில் இருந்தோம்? இந்த மக்களோடு சேர்ந்தே நாம் மனிதர்கள் ஆனோம் ஆகவே எல்லாவற்றையும் இன்பத்தையும் துன்பத்தையும் - அவர்களோடு சமமாகப் பகிர்ந்து கொள்வோம்.

■

தூரத்தில் சண்டை நடந்து கொண்டிருந்தது. இரத்தம் பெருகிக் கொண்டிருந்தது. ஆனால் நாங்களோ (பெண்கள்) உழைப்பு என்ற போரில் ஈடுபட்டிருந்தோம். நாள்தோறும் ஒருவர் பின் ஒருவராக ஆண்கள் போர் முனைக்குச் சென்றார்கள் நாங்களோ காலைமுதல் மாலைவரை கூட்டுப்பண்ணையில் கழித்தோம்.

■

திடகாத்திரமான ஆண்கள் இல்லவே இல்லை. நோயாளிகளும், நொண்டிகளும், முடங்களும்தான். மற்ற உழைப்பாளிகளோ பெண்கள், கன்னிகள், குழந்தைகள், கிழவர்கள். இவர்கள் உற்பத்தி செய்ததை எல்லாம் போர்முனைக்கு அனுப்பி வந்தோம். பண்ணையில் வண்டிகளுக்குச் சக்கரங்கள் இல்லை. கடிவாள வார்கள் முடிச்சுப் போட்ட கயிற்றுத் துணுக்குகள்: குதிரைகளின் கழுத்துப் பட்டைகள் பிய்ந்து போனவை. கொல்லன் பட்டறையில் நிலக்கரி கூடக் கிடையாது. வெள்ளப்படுக்கையில் உலர்ந்த நிலத்தில் வளர்ந்திருந்த முட்புதர்களை வெட்டிக் கொணர்ந்து எரித்து நாங்கள் உலை அணையாமல் காத்தோம்.

(அன்னை வயல் நாவலில் இருந்து)

www.tamileelamarchive.com



காற்றை எதிர்த்து
தடைகள் பல தாண்டி
உயிரைக் கையில் பிடித்து
ஓடும் வாழ்க்கைச் சக்கரம்

காலத்தை வெல்லும்
திடம் கொண்டு
தெருத் தெருவாய்
திரிந்தெம் தேவை
தீர்க்க
பொழுதெலாம் அடித்து
வீடு போய், பின்னும்

"இஞ்சரேப்பா
ஊரின் முகப்பில்
மாவீரர் வளைவு கட்டினமாம்
எல்லா ஆம்பிளையளும்
அங்க போயிட்டினம்"
"அப்படியா" என்று கேட்டு

"உடல் களைத்தாலும்
மனம் சளைக்கக் கூடாது"
என்று எழுந்திருக்கும்
இவர்களும் மாவீரர்களே!!

தமிழீழ ஆவணக் காப்பகம்
www.tamileelamarchive.com